

# ஒரு கவிஞனின் இதயம்

கவிஞர்
வெள்ளியங்காட்டான்
கடிதங்கள்

# ஒரு கவிஞனின் இதயம்

## வெள்ளியங்காட்டான் கடிதங்கள்

தொகுப்பு
**இரா. நளினி**

**யதி வெளியீடு**
அரசமர வீதி, ஆவாரம்பாளையம்
கோயமுத்தூர் 641 037

**ஒரு கவிஞனின் இதயம்**

(கவிஞர் வெள்ளியங்காட்டான் கடிதங்கள்)

முதற் பதிப்பு அக்டோபர் 2007

தொகுப்பு : **இரா. நளினி**

உரிமை : இரா. நளினி

வெளியீடு
**யதி வெளியீடு**
அரசமர வீதி
ஆவாரம்பாளையம்
கோயமுத்தூர் 641 037
போன்: 0422-2561015

அச்சு
திலகா ஆஃப்செட் பிரஸ்
169, 6வது வீதி தொடர்ச்சி
காந்திபுரம், கோவை 12.
தொலைபேசி: 2523205

விலை
ரூ.50

# காணிக்கை

ஏறக்குறைய அரை நூற்றாண்டுக்கு முன் எழுதப்பட்ட கடிதங்களைப் பாதுகாத்துத் தந்தையின் இதயத்தை வெளியிட உதவிய மறைந்த என் அருமைச் சகோதரர் மனோகரன் அவர்களுக்கு,



கவிஞர்
**வெள்ளியங்காட்டான்**

துணைவியார்
**குட்டியம்மாள்**



கவிஞர் வெள்ளியங்காட்டான் வாழ்ந்த வீடு

கோவையிலிருந்து குந்தா டேம் செல்லும் வழியில், வெள்ளியங்காடு என்ற கிராமத்தில் அவர் வாழ்ந்த வாடகை வீடு. அக்கிராமத்தின் நினைவாகவே 'வெள்ளியங்காட்டான்' என்று பெயர் சூட்டிக்கொண்டார்.

கவிஞரின் மக்களான
வசந்தாமணி, மனோகரன்,
நளினி ஆகியோருக்குப் பல
சந்தர்ப்பங்களில் பல
இடங்களிலிருந்து
எழுதிய கடிதங்கள் இவை...

# பதிப்புரை

"நான் என்ன எழுதுவேன் என் கண்ணீரை தவிர! கவிஞர்களையும், மனநோயாளிகளையும் உலகம் வெவ்வேறாகக் கருதுவதில்லை, மனநோயாளிகளைப் போலவே கவிஞர்களும் தனிமைப் படுத்தப் பட்டிருக்கிறார்கள்"

– தேவி பாரதி

ஆம்...! அது முற்றிலும் உண்மையே. அவ்வாறான தனிமையே அவர்களுக்கு உரமாக, ஊக்குவிப்பாக, சிந்தனைக்கு மருந்தாக அமைந்தபோதிலும் வறுமைக்கு ஆட்பட்டவர்களாகவும் உதவும் கரங்களை முற்றிலும் இழந்தவர்களாகவும் இருக்கிறார்கள் என்பதற்கு என் தந்தையின் கடிதங்களே சான்று.

தந்தையின் 'கவிஞன்', 'அறிஞன்', 'தமிழன்', 'தாயகம்', 'புரவலன்', 'பரிசு' போன்ற காவியங்கள் வறுமையில் அச்சாகி அட்டைக்கு வழியில்லாமல் குப்பைக்குச் சென்றது போக, ஒன்றோ இரண்டோ கைக்கு வந்தும் வாய்க்கு எட்டாமல் போனாலும், மக்களின் செவிக்காவது எட்டியதா என்றால்...? இல்லை. இருந்தும் நான் முயல்கிறேன் மீண்டும் மீண்டும் ஒரு சிறு முயல் போல.

'தமிழில் எழுத வந்தவர்களைப் போன்ற திக்கற்ற நிலை உலகில் வேறு எவர்க்கும் இல்லை. ஆயினும்கூடப் பட்டினி கிடந்தும், செத்தும் எழுத்தாளன் எழுதிக் கொண்டேயிருக்கிறான். பசி, பிணி, மூப்பு, சாக்காடு என்ற எல்லாவற்றையும் பார்த்துச் சிரித்தவாறு எழுதிக் கொண்டேயிருக்கிறான்.'

ஆம்...! அப்படி எழுதிய எழுத்துக்களானதால்தான் முதியவள் நான் முயன்று கொண்டேயிருக்கிறேன்.

நூறு வருடத்திற்கு முன் பிறந்து மூன்றாண்டே கல்வி கற்ற ஒரு கவிஞனின் நினைவுச் சின்னங்களான அவை –

புதைபட்டுப் போகாமல் – ஞாலத்தின் கல்வெட்டாக – ஒரு நாள் அது விழிக்கும்! மலரும்! மணம் பரப்பும் என்ற நம்பிக்கையோடு! வெள்ளியங்காட்டான் கவிதைகள், கவியகம், நீதிக்கதைகள், புது வெளிச்சம் என்பனவற்றைத் தொடர்ந்து ஒரு கவிஞனின் இதயம் என்ற கடிதத் தொகுப்பும் இப்போது வெளிவருகிறது.

முதல் வித்தினை விதைத்துத் தழைக்க உதவிய மதிப்பிற்குரிய புவியரசு, இரணியன், தங்க முருகேசன் போன்றோரை இன்றும் நன்றியுடன் நினைவு கூர்வதோடு, எந்தவித எதிர்பார்ப்புமின்றி என் தந்தையின் உயிர் மூச்சான எழுத்துப் பணிக்கு முழுமனதுடன் உதவும் என் அன்புப் புதல்வனும், புதல்வியுமாகிய இராதா மகேந்திரன் அவர்களுக்கும், நல்ல முறையில் அச்சிட்டு வழங்கும், 'நந்தினி அச்சகம்' வேனில் கிருஷ்ணமூர்த்தி அவர்களுக்கும் மற்றும் சிறப்புறப் பணிபுரிந்த தொழிலாளத் தோழர்களுக்கும் என் அன்பு கலந்த நன்றியை உரித்தாக்குகிறேன்.

– வெ.இரா. நளினி

# முகவுரை

கடிதங்கள் -

அவைதான் எத்தனை வகை - !?

மு.வ. அவர்களின் கற்பனையில் இலக்கியமாக மலர்ந்து தம்பிக்கும், தங்கைக்கும், அன்பு, பண்பு, அறிவு எனக் கலந்தூட்டிய கடிதங்கள்.

பாரதியும் பாரதிக்காக பலரும் பலவிதமான பாராட்டுதலோடு கூடிய பல கருத்துக்களைக் கொண்ட கடிதங்கள்.

இலக்கியத்தையே இலட்சியமாகக் கொண்டதால் வந்த துன்பத்தை, துயரத்தை, தன் காதல் கிழத்தியுடன், உருகி, உருகி கனிந்து பங்கிட்டுக் கொண்ட 'புதுமை பித்தனின்' கடிதங்கள் என பல விதங்களில்.

அப்படி ஒரு கவிஞன் தன் குழந்தைகளுக்காக எழுதப்பட்ட கடிதங்கள்தான் இவை என்ற போதும் நேருவைத் தவிர இன்று வரை எவரும் இம்மாதிரியான கடிதங்களை வெளியிட்டதாக நான் அறிந்திருக்கவில்லை.

கற்பனைகளற்ற தமக்கே உரித்தான துணிவுடன் தந்தை என்ற உணர்வுடன் உண்மையுடனும் கூடி எந்நிலையிலும் அச்சமற்று இயங்கவேண்டும். மனித நேயத்தோடு வாழவேண்டும் என்ற ஒரு கவிஞனுக்கே உரிய முறையில் எழுதப்பட்ட கடிதங்கள் இவை.

எல்லா கால கட்டத்திலும் எல்லோருக்கும் பயன்படும் வகையில் அமைந்திருக்கின்றன. நெருக்கடியான நேரத்திலும் அமைதியாக சிந்தித்துச் செயல்படவும் தன்னைத் தானே சீர்தூக்கி பார்த்துக் கொள்ளவும் கூட இவை உதவிகரமாக இருக்கும்.

அரை நூற்றாண்டுக்கும் முற்பட்ட காலகட்டத்தில் எழுதியவை இக்கடிதங்கள். காலத்தால் அழியாதவை. மேலும் அவர் வறுமையின் பல தருணங்களில் உண்ண உணவே இல்லாதபோதும் வருந்தியதில்லை. அண்டை மாநிலத்திற்குச் சென்று தன் வயோதிக காலத்திலும் மண்வெட்டி கொண்டு உழைத்து வாழவும் தயங்கியதில்லை. எந்த ஒரு சந்தப்பத்திலும் தன்நிலைபற்றி நொந்து கொண்டதும் தளர்ந்து போனதும் இல்லை. ஒரு கவிஞனுக்குரிய கம்பீரத்தோடு மரணம் வரை அச்சமற்று வாழ்ந்தார் என்பதை அவாரின் இதயத்தைப் படிக்கும் நீங்களும் அறிந்து கொள்வீர்கள்.

இதைப் பற்றிய உங்கள் கருத்துக்களை எழுதினால் கவிஞனுக்குச் சாற்றும் மலர்களாக அவரின் அடுத்த கவிதை நூலில் பிரசுரிக்க முயல்வேன்.

என்றும் அன்புடன்
வெ.இரா. நளினி

# 'ஓ...! என் மரணமே! வா...!

'ஓ...! என் மரணமே! வா...! வந்தென்னைத் தழுவிக் கொள். என் உயிர் உன் வருகையை எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருக்கிறது. வா... வா... விரைந்து வந்து இந்த சடப் பொருளான சமுதாயத்தின் வலிய பிடியிலிருந்து என்னை விடுவித்து விடு.

ஏனெனில் நானிங்கு ஒரு தேவ தூதனாக வந்தேன். தேவ மொழியில் உரையாடினேன். என் அர்தமுள்ள அற்புதமான மொழி இவர்களுக்குப் புரியாமல் போயிற்று. என்னைப் புறக்கணித்து விட்டனர். காரணம், இவர்களைப் போல், செல்வத்தின் பால் ஆசை கொண்டு பலவீனமானவர்களைத் தோலுரித்து நான் பணம் சேர்த்துக் கொள்ளவில்லை. ஆதலால் ஓ... என் மரணமே மக்களுக்குத் தேவையற்ற நான் உனக்கும் வேண்டப்படாதவன் ஆவேனோ?

உன் இதயத்தில் என்பால் அன்பென்னும் அமுது ததும்பி வழிந்து கொண்டிருக்கிறது. வா...! விரைந்து வந்து என்னை ஆரத் தழுவிக்கொள்.

உன் அணைப்பில் என் அமைதியான உறக்கம் ஆரம்பமாகட்டும்.
என் இனிய மரணமே...!
என் அருமை நண்பனே வா...
விரைந்து வா...! உன் தாலாட்டில் நான் அமைதியாக உறங்க வேண்டும்'

- கலீல் கிப்ரான்

நல்ல இலக்கியவாதிகளின் - இதயங்களின் அழைப்பும் விருப்பும் இன்றைய நிலையில் இதுவே.

# 05.04.1957

நவ இந்தியா

## அதிக உயர்வு தங்கள் கவிதைக்கு இருக்கிறது!

*அன்புடையீர்,*

*தங்கள் 3ம்தேதியிட்ட கடிதம் வரப்பெற்றோம். 'அர்சுனன் துயரம்' என்னும் கீதையின் முதல் அத்தியாயம் அதற்கு முன்னரே வந்தது. எங்கள் வசதிகள் இடமளிக்குமளவில் அதை நல்ல முறையில் எவ்வாறு பிரசுரிப்பது என யோசித்துக் கொண்டிருந்தோம். அந்நிலையில் தங்கள் கோரிக்கை கடிதம் வந்து வேதனையூட்டியது.*

*அந்தக் கவிதையைப் பிரசுரம் செய்ய அதனை ஆக்கியோர் ஒரு பத்திரிக்காலயத்தாரை வேண்டவும் வேண்டிய நிலையிலா தமிழ் இலக்கிய உலகம் இன்று இருக்கிறது? என்பதை நினைக்கும்போது மகிழ்ச்சிக்கு இடமேது? பத்திரிக்கையில் பிரசுரம் செய்வதைக் காட்டிலும் அதிக உயர்வு தங்கள் கவிதைக்கு இருக்கிறது. நிரந்தர இலக்கியம் என்னும் பிரிவில் அது சேருகிறது.*

பதினெட்டு அத்தியாயங்களையும் பாடி முடித்துவிடுங்கள். நாட்டுப்புறம் இங்கே இருக்கும் வரை நவ இந்தியாவில் தாங்கள் விரும்பும் இடம் உவகையோடு அளிக்கப்படும்.

தங்கள்,

நாட்டுப்புறம்..

நவ இந்த்'யா நாள்'தழ்'ல உதவ்' ஆச்'ர்'யராகப் பணிபுரிந்தவர்

பி.கு: கோவையில் என் தந்தை 'நவ இந்தியா' என்ற நாளிதழின் வாரமலரில் கவிதைகள் எழுதிக் கொண்டிருந்தார். பின்னாளில் அங்கேயே புரூப் ரீடராகவும் வேலை பார்ததார். ஆனால், புரூப் ரீடருக்கான சம்பளத்தை அரசு உயர்த்தியபோது, இவருக்கு கல்விச் சான்றிதழ் இல்லை என்றுகூறி சம்பள உயர்வு மறுக்கப்பட்டதும், சுயமரியாதை காரணமாக அவர் வேலையை விட்டு விலகினார். அடுத்த வேளை சோற்றுக்கில்லை என்கின்ற நிலையிலும் கூட.

# 11.10.1947

சிங்காநல்லூர்

## உங்கள் சேமமே எங்கள் செல்வம்

எனது அன்புக் குழந்தைகளே!

நாளும், நாட்கள் சென்று கொண்டேயிருக்கின்றன. இதில், நம்முடை ஆயுளிலும் ஒவ்வொரு நாள் செல்லுவதை நாம் உணராமலில்லை. இதை நினைக்கும் போது எனக்கு ரொம்ப வருத்தம் ஏற்படுகிறது.

வாணாளை வீணாக்காமல் என்ன செய்யலாமென்று நான் ஒவ்வொரு நிமிஷமும் சிந்தித்துக் கொண்டேயிருக்கிறேன்.துன்பப்படுகிறவர்களுக்கு எந்த விதத்தில் உதவ முடியும் என்னென்ன செய்ய முடியும் என்ற எண்ண அலைகள் என் இதயக்கடலில் மோதிக் கொண்டிருக்கின்றன.

இவ்வாறு உந்தப்பட்டவனாகிய நான் புளியம் பட்டிக்கு வரமுடியாதவனாய் வெள்ளியங்காட்டிற்குச் செல்ல நேரிட்டது. இங்கு பணம் தயாராய் இருக்கிறது. பணம் கைக்கு எதிர்பாராத அளவு கிடைத்ததினால்தான் நான் வெள்ளியங்

காட்டிற்குச் செல்வதும். நமது அப்பம்மாளுடைய வருத்தம் தோய்ந்த முகம் என்னுடைய மனதை மிகவும் நோகடித்துவிட்டது. அந்தக் கிழக் கண்ணிலிருந்து ஒழுகும் கண்ணீரை ஒரளவு துடைப்பது என் கடமையாகவும் இருக்கிறது. எனவே நான் வராததற்கு நீங்கள் வருந்துவதற்குப் பதிலாகச் சந்தோஷப்படுவீர்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

எனவே உங்களுடைய வரவு இங்கு ஆவலாக எதிர்பாரார்க்கப்படுகிறது.

உங்கள் மகிழ்ச்சி எங்கள் மனச் சாந்தி.

உங்கள் சேமமே எங்கள் செல்வம்.

எங்கும் நலம் பெருகுக.

இங்ஙனம்
N.K. இராமசாமி

பி.கு: அவருடைய பெரியம்மாவுக்கு மழை பொய்த்துப் போனதால், நான்கு பெண் குழந்தைகளோடு மிகச் சிரமத்திலிருந்த காலத்தில் அவர்களுக்கு உதவச் சென்றபோது

# 16.01.1948

செங்காளிபாளையம்

## இறைச்சலும் புழுக்கமும் இல்லாத ஊர்

அன்புமிக்க குழந்தையே!

நலம். நலமே கோருகிறேன். மனோ அமைதியை நாடி நானும் உனது அன்னையும் தற்போது இங்கு வந்துள்ளோம். இறைச்சலும் புழுக்கமும் இல்லாத இந்த ஊர் எங்களுக்குப் பிடித்திருக்கிறது. அதிகமாக இருந்தால் மூன்று மாதங்கள் வரை இங்கேயே இருப்பதாக உத்தேசம். செங்காளிபாளையம் நமக்கு அந்நிய ஊர் அல்ல; எனவே எங்களுக்கு வேண்டிய எல்லா செளகர்யங்களும் எதிர்பாராத முறையில் அமைந்திருக்கிறது. அங்கு ஏதேனும் செய்தி இருந்தால் கடிதம் எழுதவும்

N.K. இராமசாமி

பி.கு: அம்மாவின் பிறந்த ஊர் அது. நெருங்கிய உறவினர்கள் பலர் அங்கு இருந்தனர்.

# 08.04.1948

செங்காளிபாளையம்

## யாருக்கும் அஞ்சமாட்டேன்

எனது அருமைக் குழந்தாய்!

உன் கடிதம் கிடைத்தது. அதிலிருந்து சில வார்த்தைகள் எனக்குச் மகிழ்ச்சியையும், இன்னும் சில விசனத்தையும் கொடுத்தன. சர்வசக்தி படைத்த கடவுள்முன் இறைஞ்சி நின்று இதுநாள் வரையும் எனக்காக நான் ஒன்றும் கேட்டது கிடையாது. ஆனால், கடவுள் எதைக் கொடுத்தாலும் நான் முழு மனதுடன் கையேந்தத் தயாராகவே இருக்கிறேன்.

நீ பிறந்த அந்தக் காலத்திலிருந்து நான் பலமுறை எண்ணியதுண்டு - பலதடவை சொன்னதும் உண்டு. அரசனுடைய வயிற்றில் பிறக்க வேண்டியவளாகிய நீ ஒவ்வொரு நாள் மாலையும் காலை உணவுக்கு என்ன செய்வது என்னும் கவலைமிக்க என்னுடைய வயிற்றில் தவறி வந்து பிறந்துவிட்டாய்.

உன்னுடைய அருமையை நான் அறிந்தேன் - அதற்கு இணங்க

நடந்துகொள்ள நான் அசக்தனானேன். விதி என்ற ஒரு மகாசக்தி கவி என்ற ஒரு கயிற்றை என் கழுத்தில் போட்டு இறுக்கி என்னவெல்லாமோ ஆட்டம் போடச் செய்கிறது. இந்தப் பேய்க் கூத்தில், இந்த ஊழிக்கால நர்த்தனத்தில், அருமையும் மென்மையும் வாய்ந்த உன்னை ஒரு தக்க இடத்தில் ஒப்புவித்துவிட்டதாக நான் எண்ணிச் சற்று நிம்மதியடைந்தது உண்மை. ஆனால் வயிற்றுவலி உருவத்தில் அதையும் நான் இழப்பதா?

ஆம்! நான் ஒரு கவிஞன். எனக்கு இந்த உலகத்தில் யாரும் நண்பர்கள் கிடையாது - அதே நிமிடத்தில் பகைவர்களும் கிடையாது. உற்றாருமில்லை, உறவினருமில்லை. எனக்கு எல்லாரும் சமம். எங்கு குணமிருந்தாலும் அதைக் கொண்டாடுவேன். எங்கு குற்றமிருந்தாலும் அதை விஷம் போல் வெறுப்பேன். யாருக்கும் அஞ்சமாட்டேன். யாருக்கும் வணங்கினதுமில்லை.

இப்போது என்னை இருள் சூழ்ந்து கொண்டிருக்கிறது. நான் இருப்பது மற்றவர்களுக்குப் புலப்படாமலிருக்கலாம். ஆனால், என்முன் விடிவெள்ளி ஒளிவிடுவதை நான் காணுகிறேன். அடுத்த நேரத்தில் உதயவான தரிசனத்துக்கு நான் தயாராகி விடுவேன் என்ற நம்பிக்கையும் நிறைய இருக்கிறது.

இந்த ஊரில் நான் இரண்டு மாதம் தங்கலாமென்றுதான் முதலில் நினைத்தேன். ஆனால், கிட்டத்தட்ட மூன்று மாதமும் ஆகிவிட்டது. இனி எந்த ஊருக்குச் செல்லுவேனோ அது எனக்கே தெரியாது. ஆம்! இந்தக் கடிதம்தான் இந்த ஊரிலிருந்து எழுதும் கடைசிக் கடிதமென்று நினைக்கிறேன். நீயும் சரியான விலாசம் கொடுக்கும் வரை எனக்குக் கடிதம் எழுத வேண்டாம்.

மாடுகள் தான் முதலில் ஈனும். அதில் வெள்ளைமாடு ஈன்றிருக்கிறதாகத் தகவல். ஆனால் இந்தத் தீனியில்லாத பஞ்சகாலத்தில் அது அடையாளம் தெரிந்து கொள்ள முடியாத அவ்வளவு கேவலமாகி விட்டதாகத் தெரிகிறது. கன்றுக்கே பால் காணாது என்று நினைக்கிறேன். நீ விரும்பினால் ஓட்டிக் கொண்டு போகலாம். என்னிடத்தில் எத்தனையிருந்தாலும்

உன்னுடையதுதான். ஒரு மாடு மட்டுமென்ன உனக்குப் பிரியமிருந்தால் இங்குள்ள எல்லா உருப்படிகளையும் ஓட்டிக்கொண்டு செல். என்றிருந்தாலும் இவையெல்லாம் உன்னுடையவைகளே.

மனோகரனுக்கு உடம்பு தேவலை. அவன் இப்போது செங்காளிபாளையத்தில் எங்களுடன்தான் இருக்கிறான்.

என் அருமைக் குழந்தையே! உன்னுடைய கடிதத்தில் இரண்டு மூன்று பாடல்களை எழுதியிருக்கிறாய் - பொருள் விளக்கும்படியாக இவையெல்லாம் உனக்கு எதற்கு வேண்டும்? இதை எல்லாம் படித்து வாழ்ந்துதான் என் பிழைப்பு வறுமையும் துக்கமும் நிறைந்ததாகிப் போய்விட்டது. இந்த மாதிரியான வேலைகளில் நீ இனிமேல் தயவு செய்து தலையிட்டுக் கொள்ள வேண்டாம். என்னைப்போல் சோற்றுக்கில்லாது முன்காலத்தில் திண்டாடிக் கொண்டிருந்த பைத்தியம் ஏதோ கிறுக்கிவிட்டுப் போயிருக்கும். விளங்காத பாட்டு விளங்காமலே போகக் கடவதாக.

மற்றபடி யாவும் நலம். மாடு வந்ததும் தெரிவிக்கிறேன்.

N.K. இராமசாமி

பி.கு: திருமணமான பின் குடும்பத்தில் சிறு சிறு பூசல்கள். வயது குறைவாக இருந்ததால், அதை சாமார்த்திமாக சமாளிக்க முடியாமல் எழுதிய கடிதத்திற்கு வருந்தி எழுதிய பதில்.

# 14.04.1948

செங்காளிபாளையம்

## இந்த உலகத்தைப் பார்த்துச் சிரிப்பதா? அழுவதா?

அன்புள்ள குழந்தையே,

வாழ்க்கை அறிஞனுக்கு வயிற்று வலியாகவும், மூடனுக்கு மாம்பழமாகவும் தான் என்றும் இருந்து வருகிறது.

நானும் பார்த்துக் கொண்டே வருகிறேன். விதி என்ற பேய்க் காற்றில் ஆடும் பட்டம் போல ஒவ்வொரு மனிதனும் ஏதோ ஒரு ஆசை மேலீட்டால் ஆட்டம் போட்டுக் கொண்டுதானிருக்கிறான். இந்த அழகில் கிளி, கழுகைப் பார்த்து இதன் இறகுகள் எவ்வளவு விகாரகமாயிருக்கின்றன என்று கேலி பண்ணுவதும், கழுகு கிளியைப் பார்த்து இந்த அப்பாவிப் பட்சி மனிதர் கையில் அடிக்கடி சிக்கிக் கொண்டு என்ன துன்பப்படுகிறது என்று இரக்கப்படுவதும் சகஜமாக நடக்கத்தான் செய்கிறது. இந்த உலகத்தைப் பார்த்துச் சிரிப்பதா? அழுவதா?

இங்கு தோட்டத்தில் தீனிக்குத் திண்டாட்டமாயிருக்கிறது. ஒவ்வொரு நாள் கழிவது யுகம் கழிவது போல. ஆதலால்,

மாட்டைப் பிடித்துக் கொண்டு போக எவ்வளவுக் கெவ்வளவு சீக்கிரமாக ஆள் அனுப்பக் கூடுமோ, அவ்வளவு சீக்கிரம் அனுப்பு.

உன் வாழ்க்கையில் அமைதி நிலவ நான் ஆசிர்வதிக்க முடியும். ஆனால் பசுமாட்டின் தீனி. விஷயத்தில் என் ஆசிர்வாதமும் கவிதா சக்தியும் செல்லுபடியாகாது என்பதை நீ தெரிந்து கொள்வாயாக. மற்றபடி யாவும் நலம்.

தந்தை
N.K. இராமசாமி

# ஏப்ரல் 1948

செங்காளிபாளையம்

## நலம் பெருகுக

எனது அருமைக் குழந்தையே,

கறவை வேண்டுமென்று சொல்லிவிட்டு இன்று மௌனம் சாதிக்கிறாய். இரண்டு நாட்களாக மாடு சிங்காநல்லூரில் தீனியில்லாமல், கவனிப்பாரில்லாமல் கட்டிக்கிடக்கிறது. நீ தாமதம் செய்யும் ஒவ்வொரு நாளும் அந்தக் கறவைக்கு கொடிய சிறை தண்டனை நாளாக முடியும் என்று அஞ்சுகிறேன். ஆனதால், இந்தக் கடிதங் கண்டவுடனாவது ஆள் அனுப்பி ஓட்டிக் கொண்டு போய் எனக்கு மன அமைதியைக் கொடு. ஏற்கனவே புண்ணாக உள்ள இதயம் உன் சந்தோஷத்தால் குணம் காண அவாவுகிறது. நலம். நலம் பெருகுக!

தந்தை

N.K. R

பி.கு: பாட்டியும் தாத்தாவும் அத்தையும் இருந்தபோது, அங்கே மாட்டை அனுப்பியிருக்கலாம். ஆள் கிடைக்காமல் அதை ஓட்டிக் கொண்டு செல்லத் தாமதமாகியிருக்கலாம்.

# 31.07.1948

கமலாமில்லையன்

## பிச்சைக்கார இனம் பெருகிக் கொண்டிருக்கிறது

என் அறிவுமிக்க மகளே,

உனக்குச் சர்வ நலமும் உண்டாகுக.

''நாடகமே உலகம்'' என்ற மகாவாக்கியம் உண்மை. இந்த வாக்கியத்தின் நிழலிலேதான் என்னைப் போன்ற சுபாவஸ்தன் உடலும் மனமும் அலுத்த சமயம் உட்கார்ந்து ஆசுவாசப் படுத்திக் கொள்ள முயலுகிறான். கடித ஆரம்பத்திலேயே இதையேன் சொல்ல வந்தேன் என்றால் இந்த நாடகமாகிய உலகத்தில்தான் இன்று நாமும் வாழுகிறோம் என்பதை என்னுடன் நீயும் (மனம் சலித்த சமயம்) நினைத்துக்கொண்டு ஆறுதல் பெறவேண்டுமென்பதற்குத்தான்.

இன்று நன்றாகத் தூங்கி எழவேண்டும் என்று நினைத்துக் கொண்டு படுத்தேன். ஒரே நிலையிலும் படுத்துக்கொண்டு பார்த்தேன். அப்படியும் இப்படியும் புரண்டு புரண்டு படுத்துப் பார்த்தேன். இவ்வளவுக்குப் பின்னும் தூக்கம் வரவில்லை. ஒன்றை நினைக்கின்

அது கழிந்திட்டு ஒன்றாகும். என்ற வாக்கு என்வரைக்கும் பூர்ணமாகப் பலித்துதான் இந்தக் கடிதம் எழுதுவதில் கொண்டுவந்து விட்டிருக்கிறது.

அடுத்த வீட்டுப் பாட்டியின் தொணதொணப்பைத் தவிர மற்றபடி எல்லாவிதத்திலும் நிசப்தமான இரவு. இந்த இரண்டொரு மாதகாலமாக நமது ஜில்லா முழுவதும் சுற்றிக் கொண்டு எதுவுமே எழுதாது சும்மா இருந்த கை, 'கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்களே' என்றபடி தொட்டுத் தொட்டு எழுதினாலும் நன்றாக எழுதும் பவுண்டன் பேனா இந்த நிலையில் இந்தக் கடிதம். எங்கு சென்று - எப்படி முடிகிறதோ - என்ன விளைவுகளை உண்டாக்குகிறதோ அதை நான் அறியேன்.

விலைவாசிகள் இன்றுள்ள நிலையில் உழைப்பைத் தவிர வேறு ஊதியமே இல்லாத நம் குடும்பத்தின் மேல், நம்மினத்தவரால் பழிவாங்கும் படலம் ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்த நிலையில் உதவி செய்கிறேன் என்று சொல்லிக் கொண்டிருந்து - என்னுடன் நாமக்கல்லுக்குக் கூடவந்து பல அச்சாபீஸ் படிகளிலெல்லாம் ஏறி இறங்கி உற்சாக மூட்டிய நண்பர் செய்கிறேனென்ற உதவியைச் செய்ய முடியாமல் - எதிர்பாராத வகையில் ஏற்பட்ட காலக் கோளாறின் காரணமாக இரண்டு கைகளையும் அகல விரித்துவிட்ட இந்த நெருக்கடியான கட்டத்தில், அவசரத்துக்கு வாங்கி, அஜாக்கிரதையால் கொடுக்க மறந்துவிட்ட நிலையில் கடன் கொடுத்தவர்கள் நெருக்கும் இக்கட்டான இந்த நிமிசத்தில் கூட, கவலையை துயரை என்னுடைய கவிதா உள்ளம் கடந்து நிற்கிறது. ஒவ்வொரு நாளும் செய்ய வேண்டிய காரியத்தை சரியாகவே செய்து கொண்டிருக்கிறேன். ஆயிரம் தடங்கல்கள் ஏற்பட்டாலும் ஆகவேண்டிய நமது காரியம் அதன்பாட்டில் ஆகிக் கொண்டுதான் இருக்கிறது. என்னுடைய அகராதியில் தோல்வி என்பதே இல்லை. இவைகள் எதற்காக எழுத நேர்ந்ததெனில் - வாழ்க்கைப் பாதையில் ஒவ்வொருவரும் எத்தனையோ மேடுபள்ளங்களைக் கடந்தாகவேண்டும்; அப்படிப்

பட்ட சந்தர்ப்பங்களில் நீ அழகிய கண்கள் கலங்கி நின்று துயர் உறக்கூடாது என்பதற்காகவும்தான். அதுவும் என் மகளாகிய நீ - மற்ற நமது நாட்டு சகோதரிகளுக்கு அன்பிலும், ஆற்றலிலும், ஈகையிலும், தெளிவிலும் ஒரு ஆதர்சமாக விளங்கவேண்டும். பாமரமக்களின் பாமரத்தனமான வார்த்தைகளால் உள்ளமுடைந்து செய்யவேண்டிய கடமைகளை - செய்தே தீரவேண்டிய செயல்களைச் செய்யாமல் விட்டுவிடக்கூடாது என்று ஞாபகப்படுத்துவதற்காகவும் கூடத்தான் எழுதுகிறேன்.

மகாத்மா காந்தி சொன்னார், "செய் அல்லது செத்துமடி" என்று. தான் சொன்ன விதமே செய்தார். தமக்கு நல்லது என்று தோன்றிய - மக்களுக்கு நன்மை உண்டாகும் என்று தான் நம்பிய - மக்கள் செய்தே தீரவேண்டும் என்றுதான் எண்ணிய அவ்வளவும், ஆபத்துக்கு மத்தியில், தூற்றல்களுக்குத் துவளாமல் உறுதியோடும் நின்று செய்தே முடித்தார். ஒரு அறிவிலியால் அவருடைய புனித உடல் மறைந்தது. அந்த உடல் என்று இருந்தாலும் மறைய வேண்டியதே. ஆனால், அவர் என்றும் இந்த உலகில் இருக்கத்தான் போகிறார். அவருடைய குரல் இந்திய தேசம் உள்ளவரையும் மணிபோல் ஒலித்துக் கொண்டுதான் இருக்கும்.

அந்த மகாத்மாஜீயின் காலத்தவராகிய நாம் - அவருடைய கொள்கையைப் பின்பற்றுவோர் என்று சொல்லிக் கொள்ளக்கூடியவர்களாகிய நாம் ஆசாடபூதிகளாக - உண்மையைப் பின்பற்றாதவர்களாக வாழ்ந்தோமேயானால், அந்த வாழ்க்கைக்கு ஒப்பு எதைச் சொல்வது? காதகனாகிய கோட்சேயின் வாழ்க்கையைச் சொல்லலாம்; சொல்லினும் அது சரியானபடி சொல்லியதாகாது.

(உடல் மேலே கதராடைகளை அணிந்து கொண்டு) உள்ளத்தைச் சுயநல அந்தகார யமனுக்கு அர்ப்பணம் செய்து விட்டவர்களைக் காட்டிலும் கோட்சே ஒரு காலத்தில் நல்லவனாகக் கருத்தப்பட்டுவிடலாம்.

(இதுதவிர இன்னும் ஒரு சின்ன விஷயம். உனக்குச் சொல்ல ஆசைப்படுகிறேன். அது என் மனதில் நானாகச் செய்து கொண்ட சங்கல்பம். அதை இங்கு எழுதவே விரும்புகிறேன். ஏனெனில் ஒருக்கால் எதிர்பாராத ஒன்று - எதிர்பாராத சமயம் (புதுமைப்பித்தன் போல்) எனக்கும் வந்து (முடியவேண்டாம்) முடிந்தது என்று வைத்துக் கொள்வோமானால் அப்போது என் இந்தச் சங்கல்பம் நிறைவேறாமற் போனாலும் போகலாமன்றோ? அந்தக் காலத்தில் எனது சந்ததிகளில் யாரொருவரேனும் பிறந்து வந்து நிறைவேற்றக் கூடுமல்லவா? அந்தக் காரணத்தை முன்னிட்டுத்தான் இங்கு எழுதவிரும்புகிறேன்.

அதாவது யாதெனில், இன்று நம் நாட்டில் பிச்சைக்காரர்கள் மிகவும் அதிகம், காசுப்பிச்சை, சோற்றுப்பிச்சை, துணிமணிப்பிச்சை - ஆகிய ரகங்களில் ஒன்று பத்து கோடியாகப் பெருகிக் கொண்டிருக்கிறது பிச்சைக்காரத்தனம். இதை இன்னும் பச்சையாகச் சொன்னால் பேராசை, இரக்கமற்றதன்மை, உலோபம், நன்மை தீமையறியாத பேதைத்தனமான பெரும் வியாதிக்காரர்களால் தான் இந்தப் பிச்சைக்கார இனம் இப்படிப் பெருகிக் கொண்டிருக்கிறது எனலாம்.

நான் மேலே குறிப்பிட்டபடி, எதிர்பாராத முறையில் - எதிர்பாராத விதத்தில் (நிச்சயமாக அப்படியே இது நடந்துவிடும்) ஒரு பணக்காரனாகிவிடும் பட்சத்தில் என் வீட்டுக்கு வந்து பிச்சை கேட்கிற என் ஏழைச் சகோதர - சகோதரிகளுக்கு ஒரு பிச்சைக்காரனைப் போல, ஒன்றே காலரிசி இரண்டரைச் சோளம் அதுவும் அளவானதுடன் எண்ணி எடுத்து மூடிக்கொண்டு வந்து போடுவது போலன்றி ஒரு கௌரவம் வாய்ந்த பணக்காரனைப்போல ஒன்றிரண்டு ரூபாய்களுக்குக் குறையாமல் கொடுத்து விடுவது என்பதுதான் அந்த சங்கல்பம்.

நாம் இப்படிச் செய்வதைப் பார்த்து, நம்மைப் பின்பற்ற ஓரிரண்டு பைத்தியங்கள் இருந்தே இருக்கும். ஒரு வாரம் போல பிச்சை எடுத்தால் ஒரு ஆடோ,

குட்டியோ வாங்கி நல்ல முறையில் வாழும் நம்பிக்கையை நாம் அவர்களுக்கு ஏற்படுத்தலாமல்லவா?

இந்த என் எண்ணம் எளிதில் முடியும். ஆம்! குழந்தையே! இன்று இந்த உலகில் ஒரு கவிஞனாக வாழ்வதைக் காட்டிலும் ஒரு பணக்காரனாவது மிகவும் சுலபம் - ஆனால் ஒரு கவிஞனாக வாழ்வதைக் காட்டிலும் உயர்ந்த வாழ்க்கை உண்மையிலேயே இல்லை என்று நான் உண்மையாகவே நம்புகிறேன்.

'மன்னவனும் நீயோ! வளநாடும் உன்னதோ! உன்னை அறிந்தோ தமிழை ஓதினேன்?' என்று ஓர் அரசனை துரும்பாக எண்ணச் செய்தது கவிதையுள்ளம்.

'வில்லேருழவர் பகை கொளினும் கொள்ளற்க சொல்லேர் உழவர் பகை' என்று எச்சரிக்கை செய்தது கவிதை உள்ளம்.

நமது புத்தகம் அச்சாவதற்குச் சென்னை சென்றிருக்கிறது. பாம்பின் கால் பாம்பறியுமென்பதற்கிணங்கி என்னைப் போன்றவர்தான் என்னை அறிந்து கொள்ளவும் முடிந்தது. அப்படி அறிந்து கொண்டவர்கள் சும்மா இருக்காது வாய்விட்டுச் சொல்லவும் செய்தனர். அது இராமசடகோபன் காதில் விழவும் செய்தது. அந்த வேலையைத் தான் பார்த்துக் கொள்வதாக அவர் ஒப்புக் கொண்டும் விட்டார். அடுத்த ஆகஸ்டு 15 சுதந்திர மலர் வெளியானதும் நமது சுதந்திரம் பிஞ்சாகி முதிர்ந்து கனிந்து அதே இடத்திலிருந்து நம்மைத் தேடி வரும் என்று நாம் நிச்சயமாக சர்வ நிச்சயமாக நம்பலாம்.

இறுதியாக இது ஒன்றுதான் சொல்லமுடியும் என் அருமை மகளே நீ உன் தந்தையை எண்ணி உண்மையிலேயே சந்தோஷப்படு. பெருமைப்படு. ஒரு மகத்தான காரியத்தைச் செய்திருக்கிறார் என்று எண்ணி உனது பளிங்கு போன்ற மனம் பூரிக்கக்கடவதாக. மறுபடியும் ஒருமுறை உன்னை வாழ்த்துகிறேன். சர்வநலன்களும் நீ வாய்க்கப் பெறுவாயாக!

வாழ்க காந்தீயம்

ஜெய்ஹிந்த்

உனது அப்பா

N.K. இராமசாமி

பி.கு. பக்கத்து வீட்டுப் பெண் படியில் கொண்டுவந்த தானியம் பிச்சைக்காரனுக்கு போடும்போது,அவன் சற்று நகர கீழே விழுந்த சில தானியத்தைப் பார்க்க நேர்ந்த போது ஏற்பட்ட கோபமே இந்த சங்கல்பத்திற்கு காரணமாயிற்று.

முதற் கவிதை நூலை வெளியிடச் செய்த முயற்சி - அதனால் ஏற்பட்ட தோல்விகள் பல. சிரமங்களின்போதும்கூட தளராது, அயராது, துணிவோடு அதை எதிர்கொண்டபோது

# 19.12.1948

சிங்காநல்லூர்

## நாளைக்கு எங்கு செல்வேனோ தெரியவில்லை

எனது அன்புக் குழந்தாய்,

மேகங்கள் படிந்த வானம் நிர்மலமாவதிலோ நிர்மலவானம் மேகங்கள் சூழ்வதிலோ எதுவும் ஆச்சரியமில்லை.

சுகமும் துக்கமும் மனித வாழ்வில் சாதாரணமே. எனினும் மற்றும் என்னைப் போன்ற ஒருவனுடைய வாழ்வில் சர்வ சாதாரணம் என்பது வெளிப்படை. நாம் எதை விரும்புகிறோமோ அதையே செய்கிறோம். அதன் பயனையே பெறுகிறோம் - அனுபவிக்கிறோம். இந்த முறையில் சுகம் - துக்கம் என்ற சொற்கள் சந்தர்ப்பம் வாய்த்த போதன்றிச் சரியான அர்த்தம் தரத்தகாததாகின்றன.

என் கொள்கை, என் அனுபவங்கள் என்னை அப்போதைக்கப்போது செலுத்திக் கொண்டு போவதில் நான் ஒதுங்கி எப்படியும் நிற்க முடியாது. எனக்காகவும் சரி - மற்றவர்களுக்காவும் சரி இவைகளைப் புறக்கணித்துவிட்டு உயிர் வாழ்வதில் பயனிருப்பதாக என்னால்

நினைக்கமுடியவில்லை. என் மனதில் பயம் எப்போதேனும் தோன்றுகின்றது. எனின் அது என் கொள்கைகளைப் புறக்கணிக்க எண்ணும் நிர்ப்பந்தம் உண்டாகும் போதுதான். மற்றவையாவும் நலம் நேற்று பழனியிலிருந்து வந்தேன். நாளைக்கு எங்கு செல்வேனோ தெரியவில்லை.

உன் அப்பா

பி.கு: மிக நெருக்கடியான நேரம். வாழ்க்கைப் படகு தட்டுத் தடுமாறி தத்தளித்தபோது

# 20.09.1949

சந்தேக்வுண்டம்பாளையம்

## அன்னையின் உடல்நிலை

*என் அன்புள்ள குழந்தாய் நலம், நலமே விளைக!*

*உன் அன்னையின் உடல் நிலை ஓரளவு தேவலை. இன்னும் பலவீனம் நிறைய இருக்கிறது. தினமும் மருந்து சாப்பிட்டுக் கொண்டு வருகிறாள். பாலுக்காக ஆடு ஒன்று வாங்கி இருக்கிறது. அவ்வளவு சீக்கிரம் சுகமாக வேண்டுமென்று எதிர்பார்க்கும் வியாதியல்ல இது. நீண்ட நாள் சர்வ சாக்கிரதையுடன் கவனித்துக் கொண்டிருக்கவேண்டியது. சாவகாசமாகத்தான் அங்கு வரமுடியும். நீ சிங்காநல்லூருக்கு அடுத்து வருவதாக இருந்தால் முன் கூட்டி எழுது. மெல்ல அனுப்பி வைக்கிறேன். உன் உடம்பை நன்றாகப் பாதுகாத்துக்கொள். மனோகரன் அடிக்கடி கடிதம் எழுதுகிறான். அடுத்த 22ம் தேதி வாக்கில் இங்கு வருவதாக எழுதியிருக்கிறான். நளினி நன்றாகப் படிக்கிறாள். நளவெண்பாவில் ரொம்ப பாடல்கள் பாடம். கதை சொல்வதில்*

முதன்மையானவள். மற்றபடி யாவும் நலம். தாமதமின்றி அடிக்கடி கடிதம் எழுதிக் கொண்டிரு.

உன் அப்பா.
N.K. இராமசாமி

பி.கு: அம்மாவைக் காசநோய் தாக்கியபோது. தந்தை சந்தேகவுண்டம்பாளையம் என்ற கிராமத்தில் ஆசிரியராக பணிபுரிந்து கொண்டிருந்தார். திருமணமான அக்கா புளியம்பட்டி என்னும் ஊரிலிருந்தார் அப்போது எழுதியது.

# 14.10.1949

சந்தேகவுண்டம்பாளையம்

## நீ ஆனந்த வெள்ளத்தில் மிதந்!

அன்புள்ள மகளே!

உன் கடிதம் கிடைத்தது. இங்கு உன் தாயின் உடல் நிலை தேவலை. இங்குள்ள ஒரு நாட்டு வைத்தியரின் மருந்தை சாப்பிட்டுக் கொண்டிருக்கிறாள். ஆனால் அதைக் காட்டிலும் நல்ல ஆகாரமும் காற்றும்தான் அவசியப்படுகிறது. ஆட்டுப் பாலில் காலையும், மாலையும் முட்டைகளைக் கலந்து சாப்பிடுகிறாள்.

உன்னுடைய உடல் நிலையை கவனித்துக் கொள். உலகப் போக்கு எப்படி இருப்பினும் உன் போக்கு உயர்ந்ததாக இருக்கட்டும். குதூகலமாக இரு. நல்ல புத்தங்களைப் படி. மன அமைதியை பெரியோர்களின் சொற்கள் நல்ல முறையில் உனக்கு உண்டாக்குகிறது என்பதில் நம்பிக்கையிருந்தால் மனமுவந்து பிரார்தனை செய். இல்லை எனில் ஏழை எளியவர்க்கு உன்னால் முடிந்த உதவியை செய்ய முற்படு.

அத்திப் பழத்தைப் பிட்டால் பூச்சிகள் இருப்பதைப் பார்க்கிறோம். அதற்காக நாம் மனம் வருந்துவதில்லை. அதுபோலவேதான், நீ மற்றவர் நடத்தையைப் பற்றிக் கவலைப்படாதே. புருஷனே என்ற போதும் பாவ - புண்ணியம் சொந்தமில்லை - அடுத்து அவரவர் அவர்களுக்குத் தக்க பயனை அடைந்தே தீரவேண்டும். அது கிடக்க நீ அமைதியாக உன் வேலையைச் செய்து கொண்டிரு.

என் ஆருயிர் குழந்தாய்! நீ உன்னை சரிவர அறிந்துகொள். உன் உடல் நிலையை சரிவர கவனித்து வா! உனக்கு தற்சமயம் வேறு யாரைப் பற்றியும் கவலை வேண்டாம்.

ஆம் என் மகளே! இந்த உலகம் முழுவதும் என்னுடையது. இதில் வாழும் மக்கள் அனைவரும் என் குடும்பத்தினர். எல்லாக் குழந்தைகளையும் நான் நேசிக்கிறேன். எல்லோருடைய தவறுகளையும் திருத்த முயல்கிறேன். என் துறையில் ஓயாது உழைக்கிறேன். இந்த தேசத்திற்கு என்னால் இயன்ற அளவு சேவை செய்கிறேன். இந்தச் சேவையில் கிடைக்கும் ஆறுதல் எனக்கு மகத்தானதாக இருக்கிறது. அழியாத இன்பம் தர வல்லதாக இருக்கிறது.

எல்லாக் குடும்பங்களிலும் ஓரிரு சச்சரவுகள் ஏற்படுவது இயற்கையே. இதை ஏன் நாம் காயமாக எடுத்துக்கொள்ள வேண்டும்? அதிகாலையில் இன்னிசை கூட்டும் கோகுலம் போல நீ ஆனந்த வெள்ளத்தில் மித. கண் மண் தெரியாமல் அறியாமை இருளில் தத்தளிக்கும் ஒவ்வொரு சீவனுக்கும், கைவிளக்காக உதவு. பச்சிளம் பயிர் போன்ற தன்மையோடு வசனி. எல்லாப் புண்களையும் காலம் மாற்றிவிடும்.

அவ்வளவுதான் உடன் பதில்

உன் அன்புள்ள அப்பா

# 16.11.1949

சந்தேகவுண்டம்பாளையம்

## உற்சாகமாக இரு!

எனது ஆருயிர்க் குழந்தாய்,

நேற்று சிங்காநல்லூரிலிருந்து கடிதம் வந்திருந்தது. பெருந்துறை ஆஸ்பத்திரியில் கொண்டுபோய் உன் தாயாரை விட்டுவிட்டு வந்ததாகவும் அங்கு மிகவும் நன்றாகக் கவனித்துக் கொள்வார்களென்றும் உன் மாமா கடிதம் எழுதியிருந்தான். வாரத்திற்கு ஒரு முறை சென்று பார்த்து வருவதாகவும் அங்கு எந்த அசௌகர்யமும் இல்லை என்றும் எழுதியிருந்தான்.

நானும் கூட இன்று உன் தாய்க்கு கடிதம் எழுதுகிறேன். நீயும் எழுது. உன் உடல் நிலை பற்றி நான் அறிந்து கொள்ளக்கூடாதா? நீ ஏன் கடிதம் எழுதவில்லை. நீ சந்தோஷமாக இருக்கிறாய்

என்றால் உன் தாய் உன்னிடம் சீக்கிரம் திரும்பி வந்துவிடுவாள் என்ற என் வார்த்தையை நம்பு. உற்சாகமாக இரு! எல்லாம் நலமாக முடியும்.

உன் அப்பா
வெள்ளியங்காட்டான்

பி.கு: இக்கிராமம் சிறுவாணிக்குச் செல்லும் வழியில் ஆலாந்துறைக்கு அருகில் உள்ளது. இங்கே ஓடும் நொய்யலாற்றை அவர் மிகவும் நேசித்தார். தம் பூத உடல் இங்கே அடக்கம் செய்யப்படுவதையும் விரும்பினார். ஆனால் அதை எங்களால் நிறைவேற்ற முடியவில்லை.

# 27.09.1950

சந்தேகவுண்டம்பாளையம்

## நம்பிக்கையோடு இன்னும் செய்து கொண்டிருப்போம்!

அன்புக் குழந்தாய்,

இன்று உன் அன்னையிடமிருந்து கடிதம் வந்தது. வெயிட் மிகவும் குறைந்துவிட்டது. மனக்கலக்கமில்லாமலிருந்தால் சீக்கிரம் உடம்பு தேறிவரும். மனதை வீணாக குழப்பிக் கொள்கிறாள். உன் அன்னை ஒவ்வொரு நாளும் உன் கடிதத்தை எதிர்பார்க்கிறாள். நீ நாள்தோரும்கூட ஒரு கடிதம் எழுதலாமே! எந்த நிலையிலும் நம் கடமையை நாம் தவறக் கூடாது. நீ படித்த குழந்தை. உன்னிடமிருந்து உன் தாயார் அடிக்கடி கடிதம் எதிர்பார்க்கிறாள். உன் சேமத்தை அறிவதும் ஆனந்திப்பதும் அவளுடைய மனதுக்கு எவ்வளவோ ஆறுதலாக இருக்குமே!

தெளிவான நடையில் புரியும்படியான எழுத்தில் அடிக்கடி எழுது. இனியாவது தவராதே. உன் அன்னை பதில் எழுதினாலும் எழுதாவிட்டாலும் நீ எழுது. இங்கு நானும் நளினியும் சுகம். நாம்

எதை எதையெல்லாம் செய்யமுடியுமோ அதையெல்லாம் நம்பிக்கையோடு இன்னும் செய்து கொண்டிருப்போம். மற்றபடி வேறு விசேஷங்களுக்குக் கடிதம் எழுது.

உன் அன்பான அப்பா
N.K. இராமசாமி

# 01.06.1950

சானடோரியம், பெருதுறை

## அவள் எப்படியும் பிழைத்துக் கொள்வாள்!

அன்புள்ள குழந்தை வசந்தாமணிக்கு,

எல்லா நலனும் உண்டாக இறைவன் அருள் புரிவார். நான் நலம். உனது நலத்திற்கு அடிக்கடி பதில் எழுதவும் உனது கடிதம் எனது உள்ளத்தை அலைக்கழித்துவிட்டது. போனதை நெனைத்து சிந்தித்துப் பயன்யாது? மனதைத் திடப்படுத்திக் கொள். சந்தோஷமாக நீ இருப்பாயானால் அது நான் செய்த பாக்கியம். அதே போதுமானது. எல்லாம் ஆண்டவன் நம்மை நடத்திவைக்கும் போது நாம் அதன்படி நடந்து தான் ஆகவேண்டும். உனக்கு நல்ல முறையில் கணவனைத் தேடிவைத்தேன். அதுவே உனது பூர்வ புண்ணியம். அவரையே தெய்வமெனக் கருதி, நீ (வாசுகி) மாதிரி இல்லறம் நடத்த வேண்டியது. எல்லாம் தெரிந்த உனக்கு நான் என்ன எழுதப்போகிறேன். உனது தம்பியை நீ அன்பாக நடத்தினாய் என்று மனோகரன் கடிதம் எழுதியிருக்கிறான்.

*அதைப் பார்த்து நான் மகிழ்ச்சி அடைந்தேன். அப்பா மனது கோனாமல், அன்பு மாறாது நீ நடந்து கொள்ள வேண்டியது. நளினியைப் பற்றிக் கவலைப்பட வேண்டியதில்லை. அவள் எப்படியும் பிழைத்துக் கொள்வாள்.*

*அம்மா குட்டியம்மாள்*

பி.கு: அம்மாவின் இந்த ஒரே ஒரு கடிதம்தான் கிடைக்கப் பெற்றது. என் சகோதரியின் இரண்டாவது குழந்தையும் மரணமடைந்ததைத் தொடர்ந்து நேர்ந்த துயரத்தில் எழுதப்பட்டது.

# 08.07.1950

காஞ்சீபுரம்

## உனக்குப் புத்தகம் போதுமா?

அன்பார்ந்த குழந்தாய்,

உன் லெட்டர் கிடைத்தது. மிகவும் சந்தோஷம். காஞ்சீபுரம் ஓரளவு நல்லவூர்தான். கோவில்கள் மிகவும் அதிகம். ஊரினுள் நிறைய தெப்பக் குளங்களும் இருக்கின்றன. சனங்கள் 99 சதவிகிதம் பக்திமான்கள். ஆனால் அந்த அளவு மூடப்பழக்க வழக்கங்களும் இருக்கின்றன. மனிதர்கள் ஆரோக்கியத்தோடு இல்லை. ஆனால் சற்றேறக் குறைய நல்ல சுபாவஸ்தர்கள். நீ ஏன் நேரில் வந்து பார்க்கக் கூடாது. கோவையிலிருந்து எட்டு ரூபாய்தான். அரக்கோணம் வந்து வண்டி மாற்றி ஏறவேண்டும். இதில் என்ன கஷ்டம்.

புத்தக வேலை நடந்து கொண்டிருக்கிறது. இன்னும் மூன்று நாட்களில் முடிந்துவிடும். அநேகமாய் 11ம் தேதி வாக்கில் நான் இங்கிருந்து புறப்பட்டு விடுவேன். உன் அன்னைக்கும் கடிதம் எழுதியிருந்தேன். பதில் வரவில்லை. நளினி சிங்காநல்லூரில்தான் இருக்கிறாள்.

*உனக்குப் புத்தகம் போதுமா? வேண்டுமானால் அனுப்புகிறேன்.*

N.K. *இராமசாமி*

பி.கு: 'எச்சரிக்கை' என்ற கவிதை நூல் வெளியிடப்பட்டது. ஆனால், அதுவே பசியின் காரணமாக பழைய பேப்பர்காரனுக்கு கிலோ ஆறணாவிற்கு விற்கப்பட்டது.

# 29.07.1950

சந்தேகவுண்டம்பாளையம்

## இந்த உலகத்தில் எதுவும் லச்சியமில்லை

என் அன்புக் குழந்தாய்,

உன் தேதியிடாத கடிதம் கிடைத்தது. நேற்று முன்தினம் நான் எழுதிய கடிதம் உனக்குக் கிடைத்திருக்குமென நம்புகிறேன். உன் அன்னையின் விஷயத்தில் நீ எந்த விதத்திலும் தப்பு அபிப்பிராயத்திற்கே வருகிறாய். உன் மனது மிகவும் கலங்கிப் போயிருக்கிறது போலும். மண்ணுலகில் இறக்கப் பிறந்தவர்களாகிய நாம், இறப்பதற்கு ஏன் பயப்படவேண்டும் என்பது எனக்கு விளங்கவில்லை. இறப்பதற்குப் பயப்படக் கூடிய ஒருவன் இந்த உலகத்தில் ஏன் வாழ வேண்டும்?

நான் என்ன சொல்லுகிறேன் என்றால், இருக்கும் வரையும் நம்பிக்கையுடனும், பரிவுடனும் கடமையாற்றவேண்டும் என்பதுதான். இதில் நாம் தவறிவிடக்கூடாது. உன் அன்னைக்கு இப்படி எல்லாம் எழுதுவது, இதை சொல்லும்படி கேட்பது எல்லாம் தப்பர்த்தத்திற்கு இடமாகும். நாம் ஒரு

நோயாளியிடம் எந்த விதத்திலும் மனக் குறை தோன்றும்படி நடந்துகொள்ளக் கூடாது. நீ நேரில் சென்று பார்ப்பதை நான் விரும்பவில்லை.

உன்னால் முடிந்தால் அடிக்கடி கடிதம் எழுது. நான் எப்போது போவேன் என்று முன் கூட்டிச் சொல்ல இயலாது. என் அலுவல்கள் எண்ணிலடங்காதவை. எனக்கு இந்த உலகத்தில் எதுவும் லச்சியமில்லை. என் கலைக்காகவே நான் வாழ்கிறேன்.

உன் அப்பா,<br>
N.K. இராமசாமி.

பி.கு: இதற்குப்பின் சில மாதங்களில் அம்மாவின் மரணம் நிகழ்ந்தது. அதை நினைத்து கலங்கிய சகோதரி தனக்கென்று அம்மா ஏதாவது கூறவேண்டும் என்ற எதிர்பார்ப்பில் எழுதிய கடிதத்திற்கு பதிலாக

# 25.11.1950

சந்தேகவுண்டம்பாளையம்

## எதிர்காலம் நம் அனைவருக்கும் ஏமாற்றமளிக்காது

என் அன்புக் குழந்தை வசந்தாமணி,

உன் தேதியிடாத லெட்டர் கிடைத்தது. ஒரு நல்ல கவிதை எழுதுவதைக் காட்டிலும் உன் லெட்டருக்குத் தகுந்த பதில் எழுதுவது எனக்குச் சிரமந் தருகிறது. இங்குகூட மழை கிடையாது. ஆனால், தண்ணீர் ஏராளமாக இருக்கிறது. இந்த வருஷம் வேளாண்மையும் ரொம்பத் தேவலை.

தோட்டங்கள் குத்தகைக்குக் கொடுப்பதும், பிடிப்பதும் இந்தக் காலமல்ல. தற்போது அனைவரும் விளைவை உண்டாக்கி அதைக்கண்டு களிக்கும் காலம். சித்திரைப் பட்டம் அறுவடைக்குப்பின் தான் ஏதாவது அப்படி யோசனையிருந்தால் முயன்று பார்க்கலாம். எனினும், எனக்குத் தெரிந்தவர்களிடம் இதைப்பற்றிச் சொல்லி விசாரிக்கச் செய்கிறேன்.

நான் இனி இங்கு கொஞ்ச காலம்தான் இருப்பேன். அதிகம் ஆனால்

மாசி முடிய. அதற்குமேல் இங்கு எனக்கு வேலை கிடையாது. இந்த ஊர் எனக்குச் சலித்து விட்டது. அடுத்தபடி எந்த இடத்தில் மக்கள் துன்பப்பட்டுக் கொண்டிருக்கிறார்களோ, எந்த இடத்தில் அறியாமை என்ற இருள் நிறைந்திருக்கிறதோ அங்கு செல்ல என் மனம் அவாவுகிறது. ஏற்கனவே 2 அழைப்புகள் வந்துவிட்டன.

என்னைப் போன்ற ஊழியனுக்கு இது போன்ற நல்ல இடங்கள் நிலையாக இருக்க இடம் கொடுக்காது என்பது மட்டும் உண்மை.

நளினி, மனோகரன் அனைவரும் சுகம். நளினியின் படிப்பு அடுப்புடன் முடிந்துவிடுகிறது. எனினும் கதைப் புத்தகங்கள் நிறையப்படிக்கிறாள்.

உன் அன்னையின் எடை எவ்வளவு குறைந்த போதிலும் கவலையில்லை. A.P ஊசி எடை குறையுமென்று எல்லோரும் சொல்கிறார்கள்.

உன் சௌக்கியத்தை மட்டும் நன்றாகப் பார்த்துக் கொள். உன் சௌக்கியம் என்றால் அங்கு உன்னைச் சேர்ந்த அனைவரின் சௌக்கியமும்தான்.

என் அன்புள்ள மகளே!

என் ஒரு தோள்மீது துன்பம் டன் கணக்கில் ஏறும் அதே நிமிடத்தில், இன்னொரு தோள்மீது சந்தோசமும் அதே அளவில் ஏறிக் கொண்டு தானிருக்கிறது. இது விவரிக்க முடியாத ஒரு புதிர். ஆனால், நான் துன்பப்படுகிறேனா? அல்லது சந்தோஷப்படுகிறேனா? ஒன்றும் தெரியவில்லை. ஆயினும் எதிர்காலம் நம் அனைவருக்கும் எமாற்றமளிக்காது என்று உறுதியாக நம்புவோமாக. என்ன நேரினும் அதைத் தாங்கும் வன்மை நமக்கு ஏற்படுமாக!

பாரதியார் பாடினார்:- ''அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே - உச்சிமீது வானிடிந்து வீழுகின்ற போதிலும்'' இந்த மகா வாக்கியத்தை நாளும் ஒருமுறை ஞாபகப்படுத்திக்கொள். மற்றவை நலம்.

உன் அப்பா N.K. இராமசாமி

# 30.07.1951

சுதந்தர வித்தியாலயம்

## வீரமும் தெளிவும் உடையவளாயிரு

என் அன்புக் குழந்தைகளே,

உங்கள் அனைவருக்கும் என் மனமார்ந்த ஆசிகள். நலம் நலத்திற்கு பதில். சென்ற வாரம் உங்களுக்கு எழுத மறந்து விட்டேன். நான் தினம் கொஞ்ச நேரம் நூற்கிறேன். இதுவரை 7 சிட்டங்கள் நூற்றிருக்கிறேன். பஞ்சு கிட்டத்தட்ட ஆய்விட்டது. நான் வரும் ஞாயிற்றுக்கிழமை அங்கு வர உத்தேசித்திருக்கிறேன். அதற்குள் ஆடிப் பண்டிகையும் வந்து விட்டுப் போய்விடும். பக்கத்து வீட்டு அண்ணாவின் மூலம் 4 கட்டு பஞ்சு வாங்கி வைக்கவும். நான் பணம் கொடுத்துவிட்டு எடுத்து வந்து கொள்கிறேன். அப்படி வந்தாலும் உடனே திரும்ப வேண்டியிருக்கும். எனவே மறந்துவிடாதே.

குழந்தாய்! அறியாமை என்பது ஒரு நோய். பேதமை ஒரு பலவீனம் என்பதை

அறிந்து அதை விலக்கு. வீரமும், தெளிவும் உடையவளாயிரு.

மற்றபடி உங்கள் பதிலை எதிர்பார்த்து

உன் அப்பா,

வெள்ளியங்காட்டான்.

பி.கு: சுதந்திர வித்யாலயம் என்ற உயர்நிலைப்பள்ளி கோவையிலிருந்து சுமார் 16 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது. அதில் வார்டன் வேலை கிடைத்தது. ஆனால் காய்ந்த காய்கறிகளை குழந்தைகளுக்கு சமைத்து வழங்குவதை எதிர்த்து தொடர்ந்த சர்ச்சையில் அங்கிருந்தும் விலகினார்.

# 28.11.1957

பி. என். பாளையம்

## கஷ்டப்படத் தயாராகவே இருக்கிறேன்!

அன்புச் செல்வி,

நலம், நலம் விளைக! மனோகரன் இன்று லெட்டர் எழுதியிருந்தான். நான்தான் எழுதாமல் விட்டேனோ? இருக்கலாம். உன் கடைசித் தபால் மழை பெய்த தகவல் என்று நினைக்கிறேன். பாபு என்ன செய்து கொண்டிருக்கிறான்? சிலேட்டு, பென்சில் வாங்கிக் கொடுத்தாயிற்றா? தோட்டத்தில் கிணறு இன்னும் முதலாளிகள் மனம் போலத்தான் இருக்கிறதா? அம்பர் ராட்டையிடம் சரியானபடி வேலை வாங்குகிறீர்களா? பருத்திப்பயிர் எப்படியிருக்கிறது? என்பதையெல்லாம் எழுது. உனக்கு இந்த மாதமும் கொஞ்சம் பணம் அனுப்ப விரும்புகிறேன். உடம்பை நல்லபடியாக வைத்துக் கொள்வதில் அசிரர்த்தை இருக்கக்கூடாது. டாக்டரம்மா அவர்களின் யோசனைகளை ஏற்று அதன்படி நடந்துகொள்வாய் என்று நம்புகிறேன். உங்கள் ஊரில் கடைசியாக ஒரு பலத்தமழை பெய்ததென்றால் அது டாக்டரம்மாவின் பொருட்டாகத்தான் இருக்கும்.

எப்படியிருந்தாலும் மழை பெய்தது, அது எல்லோருக்கும் டாக்டரம்மாவைப் போலவே உதவிச் சந்தோஷத்தை அளிக்கிறது. மனோகரன் போக்கு கொஞ்சம் கொஞ்சமாக மாறி வருகிறதுபோல் தெரிகிறது. எப்படியாயினும் சரி அவன் கெட்டிக்காரனாக, சுயமரியாதையோடு வாழ அறிந்து கொண்டால் போதும். என்னைப் பொறுத்தவரையில் நான் நளினிக்காகவும், மனோகரனுக்காகவும் இன்னும் சிறிதுகாலம் கஷ்டப்படத் தயாராகவேயிருக்கிறேன். நம் எல்லோருடைய எதிர்காலமும் சுபிட்சமாகவே இருக்குமென்று நம்புவோமாக.

மற்றவையாவும் நலம்.

உன் அப்பா வெள்ளியங்காட்டான்.

பி.கு: அண்ணா ஆசிரியப் பயிற்சிப் பள்ளியில் சேர்ந்து படித்துக் கொண்டிருந்தபோது

# 27.10.1960

புளியம்பட்டி

## காலம் நிற்பதில்லை!

*அன்புச் செல்வன் மனோகரன்,*

*24.10.1960 தேதியிட்ட உன் கடிதம் கிடைத்தது. அனைவரின் நலத்தையும் அறிந்து மகிழ்கிறேன். இங்கு யாவரும் நலம். பாபுவின் படிப்பு நல்ல முறையில் தொடங்கப்பட்டுவிட்டது. வனிதா, சின்னக்குழந்தை - இவர்களுடன் என் பொழுது நல்ல விதமாக கழிந்து கொண்டிருக்கிறது. இன்னும் அத்தானுக்கு வேலை கிடைக்கவில்லை.*

*நான் இங்கு இருப்பதில் அக்காவுக்குச் சற்று உதவியாக இருக்கிறதாம். சின்னக் குழந்தை அழுதால் தொட்டிலை ஆட்டுவது; வனிதா முரண்டு பிடித்தால் கொஞ்சம் மிரட்டி வேடிக்கை செய்வது; பாபுவுக்கு பாடங்கள் சொல்லிக் கொடுப்பது என்ற இவைகள் என் தினசரி அலுவல்கள். ஒழிந்த நேரம் படிப்பது இன்னும் நான் எதுவும் எழுதத் தொடங்கவில்லை. அதற்கான காலம் இன்னும் வரவில்லை. ஆயினும் அது சீக்கிரம் வந்து தீரும் இது நிற்க.*

நீ நன்னூலை மறுபடியும் ஆராய்ந்து அறிந்து கொள்வாய் என நான் நம்புகிறேன். இருதயம் ஒரு இலக்கணப் புத்தகமாக இருக்க வேண்டுமென்பதே என் ஆசை. மொழியைப் பற்றிய அனைத்து விபரமும் முன்கூட்டி அறிந்து கொண்டால் பின்பு அது உனக்குப் பேருதவியாக இருக்கும். தேக்கமில்லாமல் குறிக்கோளை நோக்கி முன்னேறிக் கொண்டே இருப்பதுதான் சரியான இன்பத்தின் அடிப்படை. கீதை சொல்வதும் அதுவே. முயற்சியின் வலிமை சொற்களில் அடங்குவதன்று. ஒரு செடியின் நூலளவு போன்ற வேர் பெரும் பாறைகளையும் ஊடுருவ வல்லது என்பதை எண்ணிப்பார். இடைவிடாத முயற்சிக்கு நிலையான வாழ்வுக்குச் சரியான உபமானம் ஒரு சிறு செடிதான்.

காலம் நிற்பதில்லை

இளமை நிற்பதில்லை. இன்ப துன்பங்களும் நிலைபேறுடையனவல்ல. என் அன்புக்குழந்தையே நம்முடைய சாதனைதான் உலகில் நிலைத்திருப்பது. இந்தச் சாதனைக்காகவே நாம் அனைவரும் சதா இயங்குவோமாக! மற்றவை உன் பதிலுக்குப் பின். அனைவருக்கும் என் அன்பும் ஆசியும்.

உன் அப்பா,

வெள்ளியங்காட்டான்.

பி.கு: அண்ணாவின் திருமணமும் என் திருமணமும் முடிந்தபின் என் சகோதரியிடம் சென்று இருந்தபோது

# 13.12.1960

புளியம்பட்டி

## நான் இங்கு நிறையப் படிக்கிறேன்!

அன்புச் செல்வி!

உன் கார்டு கிடைத்தது. இங்கு அனைவரும் நலம், ஒவ்வொரு நாள் இரவிலும் நான் தூங்குவதற்கு முன் உன்னை நினைத்துக் கொள்ளுகிறேன். இது ஒரு வழக்கமாகவே ஆகிவிட்டது. அமைதியான அந்த நிலையில் என் உள்ளம் உன்னை வாழ்த்தத் தொடங்குகிறது. உங்களையெல்லாம் மனமுருகி வாழ்த்துவதில் நான் மகிழ்கிறேன். என்னிடம் இதைக் காட்டிலும் உங்களுக்கு அளிக்கத்தகுந்த நல்லது வேறெதுவுமில்லை. இந்த மாபெரும் உலகத்திற்கு, உங்கள் மூன்று பேரையும் என் குழந்தைகளாகப் பெற்றுக்கொண்டு எல்லாவிதத்திலும் எதிர்காலம் சரியென்று ஒப்புக் கொள்ளத் தக்க மாதிரி வாழ்க்கையை வாழ்ந்து காட்டவே நான் விரும்பினேன். அதில் நான் வெற்றி பெறவில்லை. ஆயினும் வருந்தவேண்டியதுவும் நேரவில்லை.

ஆனால், இன்று நான்

கிழவனாகிவிட்டது போன்ற ஒருவிதச் செயலற்ற தன்மை என்னிடம் தலைகாட்டுகிறது. இது ஒருவிதப் பொய்த்தோற்றமாகவே இருக்கலாம். நான் செய்ய வேண்டியவைகள் இன்னமும் ஒரு சில காரியங்கள் இருக்கவே இருக்கின்றன. அவற்றைச் செய்து முடிக்கவே என் மனம் சதா துளைத்துக் கொண்டிருக்கிறது. அதில் ஈடுபட இயலாத சூழ்நிலையில் எனக்குக் கோபம் ஏற்படுகிறது. இதைத் தவிர்த்துக்கொள்ள நான் அசக்தனாகவும் இருக்கிறேன்.

நான் இந்தக் கடிதம் எழுதிக் கொண்டிருக்கும்போது அருகில் சின்னக்குழந்தை பாயின் மேல் படுத்தபடி அழுது கொண்டிருக்கிறது. ஆனால் அதனுடைய அழுகைக்குக் காரணம் பசியல்ல; தூக்கமும் அல்ல; நோய் நொடி எதுவும் இல்லை. நல்ல ஆரோக்கியமான நிலையில் அது அழுகிறது. அவனுக்கு வயது 1 மாதமும் 16 நாளும் ஆகிறது.

அவன் முயல்கிறான் மல்லாந்து படுத்த நிலையை வெறுத்துக் குப்புறப்படுக்க விரும்புகிறான். வயது போதாத காரணமாக அவனுடைய விருப்பம் நிறைவேறுவதில்லை. அவனுடைய அழுகை அவனுக்கு உதவுவதில்லை. ஆயினும் அழுது கொண்டேயிருக்கிறான். ஓயாது முயல்கிறான். அவனுடைய முயற்சி வெற்றி பெறாத காரணமாக அவன் தேம்பல் அழுகையாக வெடிக்கிறது.

இப்பொழுது குழந்தையுடன் என்னை ஒப்பிட்டு பார்த்துக் கொள்கிறேன். என்னை யறியாமல் எனக்குச் சிரிப்பு வருகிறது. எனக்கும் குழந்தைக்கும் வயது வித்தியாசம் தவிர மனப்பான்மை ஒன்றாகவே இருக்கிறது. ஆம், நானும் இன்னமும் ஒரு குழந்தைதான்.

அருமை மகளே! வாழ்க்கை என்பதுதான் என்ன? ஆம்; அது ஒரு இடையுறாத முயற்சி. மனதில் அச்சமோ கவலையோ இன்றி சதா இயங்கிக் கொண்டிருப்பதுதான் வாழ்க்கை. அச்சமும், கவலையும் வாழ்க்கையைக் கோணலாக்கிவிடும். நம்மை மறந்து விட்டுப் பிறரைப் பார்த்து நாம் வாழக்கூடாது. நம்முடைய கண்களை மறந்து விட்டு, நம்

[illegible]ங்களை - உண்மைகளை மூட்டை கட்டி [illegible]விட்டு வாழும் வாழ்க்கை; அதன் விளைவு [illegible]கரமானதல்ல.

[illegible]பயிரை வளரவிடாமல் களை தடுக்கிறது. களை [illegible] மூவன் தயங்கினால் பட்டபாடு வீணாகிவிடும். [illegible] என்ற பயிரில் அச்சமும் கவலையும் பெரும் [illegible], அவற்றை களைத்தெறி! நிச்சிந்தையாயிரு! [illegible] அலட்டிக் கொள்ளாதே.

[illegible]ான் இன்று காலையில் ஹரீந்திரநாத் சட்டோத் [illegible] எழுதிய கூண்டுக்கிளி முதலிய நாவல்களைப் [illegible] கொண்டிருந்தேன். அதில் 'காவலன் தீபம்' [illegible] ஒரு நாடகம். அதில் ஒரு கவிஞன், ஒரு வர்தகன், [illegible] தொழிலாளி மூன்று பிரதான பாத்திரங்கள். மூன்று [illegible] சிறைக் கைதிகள்கூட. அதில் ஒரு சம்பாசனை. [illegible] - "இப்போதுகூட நீ கடவுளை [illegible]வில்லையா?"

[illegible]தொழிலாளி:- நான் அதை ஏற்கமாட்டேன். [illegible]களுக்குத்தான் கடவுள் என்ற ஆறுதல் [illegible]டும். அதை நான், தூவென வெறுக்கிறேன். [illegible]! இயற்கை அதிசயத்தால் நீ திரும்பவும் ஒரு [illegible]னாக இம்மண்ணில் பிறந்தால், அறிவு தெளிந்த [illegible]சுரம் படைத்த நாஸ்திகனாகப் பிறக்க [illegible]டுமென்பதே என் ஆசை.

கவிஞன்:- நீ இவ்வளவு அவமதிப்பாய் கடவுளைப் [illegible], இந்தத் துன்ப நேரத்திலும் பேசுகிறாயே உனக்கு [illegible]மாக இல்லையா? மன்னிக்கும்படி அவரிடம் நீ [illegible] டுக் கொள்ள மாட்டாயா?"

தொழிலாளி:- தோழா! கடவுள் என்று ஒருவன் இருந்தால், அவன்தான் கோடிக்கணக்கான தொழிலாளர்களான எங்கள் முன்னே - மண்டியிட்டு, [illegible]டிகோடி தடவைகள் மன்றாடி மன்னிப்புக் [illegible] கவேண்டும். அப்படிச் செய்தும் எங்கள் [illegible]னிப்பைப் பெறத் தனக்கு யோக்யதை இல்லை [illegible]என்று அவன் மனமுருகவும் வேண்டும். [illegible]நூற்றாண்டுகளாய் எங்களின் - தொழிலாளிகளின் [illegible]த்தைப் பிழிந்து, துன்புறுத்திக் காலால் மிதித்து

வந்திருப்பவன் அவனேயன்றோ? நட்சத்திரங்கள் அடர்ந்த வான பீடத்திலே அமர்ந்து எங்களைத் திக்கற்ற வேட்டை விலங்குகளைப் போல் மிதித்து வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பவனும் அவனேயன்றோ? கவிஞனே நீ மீண்டும் உண்மையில் பிறப்பாயானால் சௌக்கியமாய்க் கவலையற்று வாழும் செல்வரின் கவிஞனாய் இல்லாமல் ஒரு தொழிலாளியின் சமையலறையிலுள்ள மண்பானையாய்ப் பிறந்தாலும் போதும், அது அவனுக்கும் அவனுடைய குடும்பத்துக்கும் சிறிதேனும் உதவியாயிருக்கும். ஆனால், இதையெல்லாம் விட நீயும் ஒரு தொழிலாளியாகவே பிறந்து கோடிக்கணக்கான நம் சகோதரரை யெல்லாம் கனல்வீசும் கொடியின் கீழே - இப்போதே பல சாம்ராச்சியங்களை நிலைகலங்கச் செய்துள்ள அந்தக் கொடியின் கீழ் - திரளச் செய்வதே மேலாகும்.

என் செல்வமே! இதை நீ சிந்தனை செய்துபார். இதிலிருந்து நான் சரியான பாதையில்தான் சென்று கொண்டிருக்கிறேன் என்பது நீ புரிந்து கொள்வாய் என்று நம்புகிறேன்.

மனோகரனுடைய கல்யாணத்துடன் என் குடும்பப்பழு தீர்ந்து விட்டதாக நினைக்கிறேன்; என் பொறுப்புகளை இறக்கி வைத்து விட்டதாகவே எண்ணுகிறேன். உன் சகோதரன் எப்போதும் உன் அருகில் இருக்கிறான். எந்தச் சமயத்திலும் உன் நலன்களுக்கு அவன் சரியான பாதுகாவலன். அக்காளுக்குக் கிடைக்காத இந்தச் சகோதர வாய்ப்பு உனக்குக் கிடைத்திருக்கிறது. இது ஒரு பெரும்பாக்யம் என்பதை நீ புரிந்து கொண்டால் உன் அச்சமும் கவலையும் அகன்று விடுமே.

நான் இங்கு நிறையப் படிக்கிறேன். பகலும் இரவும் தன் பாட்டுக்கு வந்து வந்து சென்று கொண்டிருக்கின்றன. நாட்கள் சீக்கிரம் சீக்கிரம் மறைந்து போகின்றன. ஆனால் என் காரியம் இன்னும் தொடங்கப் படாமலேயே இருக்கிறது; எனினும் விரைவில் அது ஆரம்பமாகிவிடும்.

மனோகரனுக்கு என்னைப் பார்க்க வேண்டும்

போல இருப்பதாக அவனுடைய லெட்டரில் குறித்திருந்தான். நான் அங்கு வந்து என்ன செய்ய இருக்கிறது? சிந்தித்துப் பார்த்தால் நான் இங்கிருப்பதுதான் சரி என்றுபடுகிறது. ஆனால் உனக்கும் என்னைப் பார்க்கவேண்டும் போல் தோன்றினால் எழுது. நான் மறுநாளே இங்கிருந்து புறப்பட்டு விடுகிறேன். அப்படி வந்தாலும் உடனே திரும்பி விடுவேன் - என்பது நிச்சயம்.

குழந்தைக்குத் தொட்டில் துணி சரியாகவே இருக்கிறது. பாபு சரிவரப் பள்ளிக்கூடம் சென்று வருகிறான். வனிதா தினமும் குறும்பு பண்ணி என்னிடம் அடி வாங்குகிறாள். அக்கா அத்தான் எல்லோரும் நலம்.

நாராயணசாமி கடைக்குக் கொடுக்கவேண்டிய பாக்கி என்ன ஆயிற்று என்று தெரியவில்லை. ஏற்கனவே மிகவும் காலம் கடந்து விட்டது. அது இன்னும் கொடுக்கப் படாமலிருந்தால் இனியாகிலும் கொடுத்து விடவும். அவர் சில ரூபாய்களுக்காக நம்மைப்பற்றித் தாழ்வாக நினைக்க இடம்தர வேண்டாம்.

இறுதியாக நான் உனக்கு ஒன்றை நினைவூட்டுகிறேன். ஒளிக்கதிரவனை மறைத்த முகில் எப்போதும் மறைத்துக் கொண்டேயிருப்பதில்லை. எப்போதும் மறைக்காமலும் இருப்பதில்லை. அதுபோலவே நமது இன்பமும் துன்பமும் வந்து கொண்டும் போய்க் கொண்டும் இருக்கிறது.

நீரை முகிலாக மாற்றிக் கொண்டும் முகில்களை நீராக்கிக் கொண்டும் உள்ளதே வாழ்க்கை. நம் வாழ்க்கையும் இது போன்றதே.

மற்றவை யாவும் நலம்

உன் அப்பா,

வெள்ளியங்காட்டான்.

பி.கு: இக்கடிதம் கர்நாடகாவிற்குச் செல்லுமுன் எழுதப்பட்டது. தேதியின் பிழையில் பின் பக்கத்திற்குத் தள்ளப்பட்டு விட்டது.

# 14.03.1961

புளியம்பட்டி

## இன்று அந்த உறுதுணை இல்லை ஊன்றுகோல் இல்லை

*அன்புச் செல்வி நளினி,*

*உன் கடிதம் கிடைத்தது; மகிழ்ச்சி! நலம், நலம் விளைக!*

*உனக்கு இந்தக் கடிதம் எழுதும் வேளையில் தினமணிச் சுடர் இதழ் ஒன்று என் முன் கிடந்திருந்தது. அதன் தலைப்பில் ராபர்ட் பிரெனிங்கின் ஒரு பொன்மொழி "முன்னேற்றமே வாழ்வின் நியதி; எழுவதற்கே வீழ்ச்சி; வெல்வதற்கே தோல்வி!; விழிப்பதற்கே தூக்கம்" என்பது.*

*சிறிது வெட்கத்துடன் இந்த இரவல் வாக்கியத்தைத்தான் உனக்கு இன்று என்னால் தர முடிகிறது. எனக்குச் சொந்தமானது என்று எதுவுமே என்னிடம் இருக்கவில்லை. இது உனக்குப் பயன்பட்டால், எனக்கு மகிழ்ச்சியாய் இருக்கும். என்னைத் தவிர, மற்ற அனைவருக்கும் இது மிகவும் உபயோகமான ஒரு வாக்கியம் என்று நான் உறுதியாக நினைக்கிறேன்.*

உன் அன்னை உயிருடன் இருந்த காலத்தில் நானும் எல்லாம் உடையவனாகயிருந்தேன். அவளை இழந்த அன்றே என்னுடையதாக இருந்த அனைத்தையும் நான் இழந்துவிட்டிருக்கிறேன். சற்று ஏறக்குறைய இடையில் கழித்த பத்தாண்டுகளில் எனக்கிருந்த கடமை உணர்ச்சியில் இதை நான் மறந்துவிட்டேன் போலும். என் உள்ளம் ஒரு காலியான பெட்டி; அதில் ஒன்றும் கிடையாது என்பதை இப்பொழுது தான் அறிகிறேன்.

ஆகவே, என் வரையில் ராபர்ட் பிரெனிங்கின் இந்தப் பொன்மொழி ஒரு வெற்றுச் சொல்லே. என் வீழ்ச்சி திரும்ப எழுவதற்கானதும் அன்று; என் தோல்வி திரும்ப வெல்வதற்கானதும் அன்று; என் தூக்கம் திரும்ப விழிப்பதற்கானதும் அன்று. என் வாழ்வின் நியதியான முன்னேற்றமும் அன்றோடு முடிந்துவிட்டது.

ஆயினும், நான் இன்னமும் இருக்கிறேன். வெறுமையான உள்ளத்துடனும்; செயலற்ற சிந்தனையுடனும் வீணாக இருக்கிறேன்.

ஆனால், நான் இந்த உலகத்தில் எதற்காக இன்னும் உயிருடன் இருக்கிறேன்? யாருக்காக இருக்கிறேன்?

இந்த இரண்டு கேள்விகளும் ஒவ்வொரு நாளும் வந்து என்னைத் துளைத்தெடுக்கின்றன. இவற்றிற்கு விடைகாணவும் அசக்தனாக இருக்கிறேன்.

கடந்த மூன்று மாத காலம் உனக்கு என் கைப்படக் கடிதம் எழுதவில்லை. இன்றும் எழுத வேண்டாமென்றுதான் இருந்தேன். அக்காவை பதில் எழுதிவிடும்படி கேட்டுக் கொண்டேன். ஆனால் அக்கா மறுத்து விட்டாள். ஆகவே நானே எழுதவேண்டியதாயிற்று. இந்தக் கடிதம் எழுதத் தொடங்கியபோது ஒருவிதமான எண்ணம் என் மனதில் உதித்தது. ஒரு விதத்தில் என் கேள்விக்கு அதுவே விடையாக இருக்குமோ? நான் இன்னும் வாழ்வது உங்களுக்குக் கடிதங்கள் எழுதுவதற்காகவே என்பதுதான் அந்த எண்ணம். இது எந்த அளவில் சரியான விடையாகும்?

என் அன்புச் செல்வமே என்னைப்பற்றிய ஒரு இரகசியம் இன்று உன்னுடன் சொல்ல விரும்புகிறேன். அஃதாவது, நான் யாருடைய வயிற்றில் பிறந்திருக்கக்கூடாதோ அவர்கள் வயிற்றில் பிறந்தேன். இது என் முதல் தவறு. இரண்டாவது, நான் எந்த இடத்தில் வசித்திருக்கக்கூடாதோ அந்த இடத்தில் வசித்தேன். மூன்றாவது, எது செய்யக்கூடாதோ அதையே இன்றுவரை செய்தும் வருகிறேன்.

இது என் வாழ்வில் பயங்கரமான இரகசியம்.

உன் அன்னை இருந்தவரையில் எனக்கு உற்ற துணைவியாக இருந்தாள். என் சறுக்கலில் அவள் ஊன்றுகோலாக விளங்கினாள். என் முன்னேற்றத்தில் ஒரு நல்ல ஏணியாக இருந்து உதவினாள். அதை இப்போதுதான் உணர்கிறேன். ஆனால, இன்று அந்த உறுதுணை இல்லை. ஊன்றுகோல் இல்லை. தளர்ந்த உடலுடன் தள்ளாடும் நிலையில் இன்றும் அந்தச் செய்யக் கூடாத செயலைச் செய்யவே, சாதிக்க இயலாத அந்த ஒன்றைச் சாதிக்கவே என் மனம் விரும்புகிறது.

ஆனால், என் விருப்பம் எவ்வாறு நிறைவேறும்? என் குறிக்கோள், கோட்பாடு இடைவிடா முயற்சி, மனோ வேகம் அனைத்தும் சிறுகச் சிறுக என்னை விட்டு விலகிக் கொண்டு வரும் இந்த நிலையில் என் காவியம் இயற்றும் ஆவல் எவ்வாறு வெற்றியுறும்? எந்த விதமான பற்றும் பாசமும் எனக்குக் கிடையாது. எதையாவது ஒன்றைப் பற்றினாலன்றி எதிலாவது ஒன்றில் பாசம் வைத்தாலன்றி நான் எதை எழுதுவது? ஆனால், இவ்வளவும் இன்றுள்ள சூழ்நிலை - இன்றுள்ள மனநிலை. நான் நினைப்பதுபோல் ஒரு நல்ல வாய்ப்பு என் எதிர்காலத்தில் ஏற்படுமானால் அன்று என் காவியத்தை எழுதவே செய்வேன். அன்று தான் உன் விருப்பம் போல உனக்கும் என் காவியத்தில் ஒரு பாத்திரம் இருக்கும். ஆனால் அது நிராசையே. இது நிற்க. உன் குழந்தையைப் பற்றி நான் உன் கடிதத்திலிருந்து ஒருவாறு அறிந்து மகிழ்கிறேன். அந்தச் சிறு குழந்தையால் உன் வாழ்வு நிறைவாகுக என்று வாழ்த்துகிறேன். அக்காளின் முந்திய கடிதத்தில் குழந்தை

வளர்ப்பு என்ற புத்தகம் வாங்கிப் படித்துப் பார்க்கும்படி எழுதியிருந்ததாக அறிகிறேன். அதை வாங்கி விட்டாயா? அது மிகவும் நல்ல புத்தகம். தாயாகிய அனைவரும் அறிந்து கொள்ள வேண்டிய பல செய்திகள் அதிலிருப்பதை நானும் படித்தேன். அது உன்னிடத்தில் ஒன்று இருந்தால் நல்லது. இதுகாறும் வாங்காதிருந்தால் சீக்கிரம் ஒன்று வாங்கி வைத்துக் கொள். நேரம் கிடைக்கும்போது படித்து அறிந்துகொள்.

சரோஜினியின் சந்தோசத்தைக் குழந்தை மிகுவிக்கின்றான். குழந்தையால் சரோஜினிக்கும் பொழுது நன்கு கழிகிறது என்பதை அறிய ஆறுதலாக இருக்கிறது.

எப்படியாவது நீங்கள் அனைவரும் மகிழ்ச்சிகரமாக இருக்கிறீர்கள் என்ற நினைவே எனக்குப் போதுமானது.

இனி வேறு என்ன எழுதுவது? என் உள்ளம் வெறுமையான நிலையில் இதுவே அதிகம். இனிமேல் என் கைப்படவே எழுதவேண்டுமென்று நீயும் எதிர்பார்க்காதே. அப்படி நீ எதிர்பார்த்தால் அது எனக்கு மேலும் துயர் விளைவிப்பதாகவே இருக்கும்.

இங்ஙனம்

உன் அப்பா,

வெள்ளியங்காட்டான்.

# 13.02.1961

இரத்தினபுரி காலனி

## அடிக்கடி கடிதம் எழுது!

அன்புச் செல்வி,

சென்ற வருடத்தைக் காட்டிலும் இந்த வருடம் என்னளவில் மிகவும் சௌகர்யமாகவே இருக்கிறது. ஒவ்வொரு நாளும் அதிகமாகப் படிக்கவே மனம் விரும்புகிறது. எழுத வேண்டியும் இருக்கிறது. நேரத்திற்கு சமையலையும் கவனித்துக் கொள்ளவேண்டும். இவ்வளவும் செய்து கொண்டுதான் வருகிறேன். ஆனால், இந்த எட்டு நாட்களாக படுக்கையில் விழுந்து கிடக்கவேண்டியும் நேரிட்டது.

விசயம் இதுதான் என் பழைய செருப்புகளுக்கு என்மேல் அளவு கடந்த கோபமும் வெறுப்பும் இருப்பதை அறியாமல் தொடர்ந்து அதை மிதித்துக் கொண்டிருந்தேன். 6.3.63 தேதி பட்டுக்கோட்டைக்குப் போகவேண்டி வந்தது. அது சமயம் பார்த்து என்மேல் பலமாக வஞ்சம் தீர்த்துக் கொண்டுவிட்டன பழைய செருப்புகள். வலது கால் பெருவிரல் ரணமாக்கி விட்டது. என்னென்ன

என்னென்னமோ மருந்துகள் போட்டு தற்போது புண் ஆறிவருகிறது.

குழந்தைகளை எச்சரிக்கையாக கவனித்துக் கொள்வாய் என்று நம்புகிறேன். ஓடி ஆடும் பருவம் அசட்டையாக இராதே. சரோஜினியை நன்கு கவனித்துக் கொள். அடிக்கடி கடிதம் எழுது. மற்றவை நலம்.

உன் அப்பா,
வெள்ளியங்காட்டான்.

# 01.04.1961

இரத்தினபுரி காலனி

## நாசக்கே ஒகுவ பாகி தொட்டது தாரி அகலவு

அன்புச் செல்வன்,

என் காலம் வெறும் கையோடு உட்கார்ந்து கொண்டு வீணாக கழிப்பது மன்றி உனக்கும் தொந்தரவு கொடுத்துக் கொண்டிருக்கிறேனே என்பதுதான் என் கவலையெல்லாம்.

நளினி மாடு விற்ற பணத்தை பற்றிக் கூறியிருந்தாய். நளினியும் எனக்குப் பணம் அனுப்புவதாக எழுதியிருந்தாள். அதனால் இப்போதும் ஒன்றும் கெட்டுப்போகவில்லை. நளினியால் எவ்வளவு முடியுமோ அவ்வளவை அனுப்புமாறு எழுதி விடுகிறேன். ஆனால் ஒரு பெண் குழந்தைக்கு ஒரு தந்தை கொடுத்து உதவுவதே அன்றி வாங்கிக் கொள்வதல்ல. இது நடைமுறைக்கு முரனானது நான் நளினியிடம் பணம் கேட்டு வாங்குவது. ஆயினும் வேறு வழியில்லை. பின்னால் வேண்டுமானால் நாம் அதைத் திருப்பிவிடலாம்.

ஒரு கவிஞனுடைய குழந்தைகள் நீங்கள் மூவரும். உங்கள் மூவர் பேரிலும் ஒரு இம்மி அளவு மாசும் மறுவும் ஒட்ட இடம் தரவேண்டாம் தவறு செய்பவர் பிறராக இருக்கட்டும். நீங்கள் நல்லதையே நினையுங்கள் நல்லதையே செய்யுங்கள்.

நான் இங்கு கன்னடத்தில் வழங்கும் ஒரு வாக்கியத்தை உனக்குக் கூற விரும்புகிறேன்.

“இக்கட்டாத பாகிலிந்த ஒளகே ஒகிரி, நாசக்கே ஒகுவ பாகி தொட்டது, தாரி அகலவு; அதரல்ல ஒகுவவரு பகுஜன. நித்ய ஜீவக்கே ஒகுவ பாகிலு இக்கட்டு தாரி பிக்கட்டு; அதன்னு கண்டு இடியுவவரு ஸ்வல்பஜன”

இதன் தமிழ் அர்த்தம் இது: “இடுக்கான கதவு வழியாக உள்ளே செல்லுங்கள். நாசத்திற்கு கொண்டு செல்லும் கதவு பெரியது. வழியும் அகலமானது. அதில் செல்பவர் பலர். அமரத்வத்திற்குச் செல்லும் கதவோ சிறியது, வழியும் மிகச் சிரமமானது. அதைக் கண்டுபிடிப்பவர் வெகு சிலரே”.

பொருள் மட்டும் தேடிக் காப்பாற்ற வேண்டியது என்று பலரும் நினைக்கலாம். ஆனால் நீ அத்துடன் பொறுமை, கருணை, அன்பு, மனச்சாந்தி முதலியனவும் கைவிடாமல் காப்பாற்றப்பட வேண்டியவை என்று நம்பி இரு!

உன் அப்பா,
வெள்ளியங்காட்டான்.

பி.கு: என் புகுந்த வீட்டில், எனக்கான சடங்குகள் தேவையற்றது. முட்டாள்தனமானது என்ற பிரச்சனையைத் தொடர்ந்து கர்நாடகத்திற்கு சென்றபோது

# 18.05.1961

இரத்தினபுரி

## வாழ்வுக்குச் சரியான உவமானம் ஒரு செடி

அன்புச் செல்வன்,

நலம்; நலம் விளைக; உன்னுடைய 15.5.61 தேதியிட்ட கடிதம் கிடைத்தது. மகிழ்ச்சி. தன்னந் தனிமையில் நூற்றுக்கணக்கான மைல் தூரத்தில் இருக்கும் என் போன்ற ஒருவருக்கு உயிராக இருப்பது தம் குடும்ப நலன்களைத் தாங்கிவரும் கடிதங்கள்தாம். கடிதம் கிடைப்பதில் தாமதமாயினும் நானும் சரி - நீங்கள் மூவரும் சரி - எழுதுவதில் மட்டும் தாமதம் இருக்கக் கூடாது. உன் அக்காளிடமிருந்தும், உன் தங்கையிடமிருந்தும் ஒவ்வொரு நாளும் கடிதத்தை எதிர்பார்த்து எதிர்பார்த்து ஏமாந்து விடுகிறேன். வாரம் ஒரு கடிதம் எழுத இவர்களால் முடியாத ஒன்றா? இது நிற்க.

என் மதிப்பில் நீ என்றும் என் செல்வ மகன்தான். எந்த நிலையிலும் உன்னைப் பற்றித் தவறாக எடை போட மாட்டேன். அதற்கு அவசியமேயில்லை.

உன் இந்தக் கடிதத்திலிருந்த சில வாக்கியங்கள் இரண்டு முறை படித்தேன். தெளிவும், அழுத்தமும் நிறைந்த கருத்தோட்டம் என்னை மகிழ்வித்தது. உன்னை மேன்மேலும் உயர்த்திக் கொள்வதில், வாழ்க்கையில் அமைதி நிறுவுவதில் முயன்று கொண்டிருக்கிறாய் என்பதைக் காட்டிலும் உன்னிடம் நான் பெறத் தக்கது வேறொன்றுமில்லை.

இந்த மாதம் நான் உன்னிடம் எதிர்பார்த்தது 30 ரூபாய்கள்தாம். ஆனால், 80 ரூபாய் நீ அனுப்பியிருக்கிறாய். இது மிகவும் சௌகர்யமாக என் காரியங்களுக்கு உதவியது. வீட்டைச் சுற்றி நல்ல வேலி போட்டிருக்கிறேன். உள்ளே இருக்கும் இடத்தை இரண்டு உழவு செய்தும் முடிந்தது. அதில் இன்னும் 20 நாளில் மிளகாய்ச் செடி பயிரிட்டுவிடுவேன்.

வயல் நடவு ஆடி மாதம்தான் நடைபெறும். ஆனால் அதற்கு முன்பிருந்தே அதில் வேலை செய்ய வேண்டியிருக்கிறது. நாளைய தினம் உண்டிமாளம் போக இருக்கிறேன். அங்கு ஓரளவு பண்படுத்தப்பட்ட நிலம் இருக்கிறதாகத் தகவல். அது முடிந்தால் மிகவும் நல்லதாக அமைந்துவிடும். அதற்கான காலம் இன்னும் வரவில்லை. ஆயினும் சீக்கிரம் அது வந்து தீரும். இது நிற்க.

நீ நன்னூலை மறுபடியும் ஆராய்ந்து அறிந்து கொள்வாய் என்று நம்புகிறேன். உன் இருதயம் ஒரு இலக்கணப் புத்தகமாக இருக்க வேண்டுமென்பதே என் ஆசை. மொழியைப் பற்றிய அனைத்து விவரமும் முன்கூட்டி அறிந்து கொண்டால் பின்பு அது உனக்குப் பேருதவியாக இருக்கும். தேக்கமில்லாமல் குறிக்கோளை நோக்கி முன்னேறிக் கொண்டேயிருப்பதுதான் நிலையான இன்பத்தின் அடிப்படை. கீர்த்தி அடையும் வழியும் அதுவே. முயற்சியின் வலிமை சொல்லில் அடங்குவதன்று. எப்படி ஒரு சிறு செடியின் நூலைப் போன்ற வேர் பெரும் பாறைகளையும் ஊடுருவவல்லதென்பதை எண்ணிப்பார்.

இடைவிடாத முயற்சிக்கு, நிலையான ...ழ்வுக்குச் சரியான உவமானம் ஒரு செடி.

காலம் நிற்பதில்லை
இளமை நிற்பதில்லை
இன்பதுன்பங்களும் நிலைபேறுடையனவல்ல.
என் அன்புக் குழந்தையே,

நம்முடைய சாதனையே உலகத்தில் நிலைத்திருப்பது. இந்தச் சாதனைக்காக நாம் சதா இயங்குவோமாக. மற்றவை உன் பதிலுக்குப்பின். அனைவருக்கும் என் ஆசியும் அன்பும்.

உன் அப்பா,
வெள்ளியங்காட்டான்.

பி.கு: கர்நாடகாவிலிருக்கும் அந்த நண்பர் தந்தைக்கு எப்படி அறிமுகம் என்பது இன்று வரை தெரியாது. அவர் தம் நிலத்தில் சிறுபகுதியை இவருக்காக ஒதுக்கித் தந்திருந்தார். அதில் இவர் உழைத்து காய்கறிகளைப் பயிரிட்டுக் கொண்டும், கோழிகளை வளர்த்துக் கொண்டும் இருந்தார். சிறுவயதில் சிறந்த விவசாயியாக இருந்ததால் அது அவருக்கு மிக விருப்பத்தோடு செய்யும் வேலையாயிற்று.

# 22.05.1961

இரத்தினபுரி காலனி

## ஆற்றல் எதற்காக இருக்கிறது?

என் அன்பு மகனே,

உன்னுடைய 17.5.61 தேதியிட்ட கடிதமும் கிடைத்தது. அக்காளுடைய லெட்டரும் கிடைத்தது. அக்காளுக்கும் இன்று கடிதம் எழுதுகிறேன்.

உள் அன்பினால் பிணைக்கப்பட்டுள்ள ஒரு கணவனும் மனைவியுமாகிய உங்கள் வாழ்வில் என்றென்றும் பெருமகிழ்ச்சி நிறைந்து பெருகும். என் வரையில் இதற்கு ஐயமேயில்லை. என்னுடைய ஆசி நான் உனக்கு அந்நியனாகும்போதுதான் பலிதமாகும். இன்று நான் வேறு நீ வேறு அன்று. எனக்கு நானே ஆசி கூறிக் கொள்ள இயலுமானால் உனக்கும் கூற முடியும். அது அவ்வளவு முக்கியமும் அல்ல. ஆசியைக் காட்டிலும் நானே உனக்காக இருக்கிறேன்; உனக்காகச் செயல்படுகிறேன்; உனக்காக வாழ்கிறேன் இதுபோலவே நீயும் எனக்கும் எல்லாமுமாக இருக்கிறாய். நம் வாழ்வில் இன்பம் பெருக. மகிழ்ச்சி பொங்கி

வழிய இது மிகவும் அதிகம். கடவுளிடம்கூட நாம் எதையும் கேட்டுத் தலைவணங்க வேண்டாம். நமக்குள்ள அறிவை, நமக்குள்ள ஆற்றலை நாம் சரியான வழியில் செயல்படுத்துவதே முறை. கடவுள் ஒருவர் உண்டெனில் அவர் விருப்பமும் இதுவேயாம்.

ஒருவருக்கொருவர் அஞ்சிவாழ்வதும் கூடாது. அது போலவே அடிமைப்படுத்தி வாழ்வதும் கூடாது. தந்தையாயினும், தனயனாயினும் அனைவர்க்கும் இது பொருந்தும். சமத்துவத்தில்தான் வாழ்க்கையின் இரகசியமே அடங்கியிருக்கிறது. சீரான செப்பனிடப்பட்ட பாதையில் நடக்கும் பிரயாணி பின்னால் திரும்பிப் பார்க்கமாட்டான். உன்னுடைய போக்கும் இத்தகையதாகவே யிருக்கட்டும்.

ஒவ்வொரு மனிதனுக்கும் போதுமான ஆற்றல் இயல்பாக அமைந்திருக்கிறது. ஆனால், அதை எல்லோரும் கண்டு கொள்ள வேண்டும். கண்டறிந்து செயல்பட வேண்டும். காலம் எதற்காக இருக்கிறது? ஆற்றல் எதற்காக இருக்கிறது? செயல்படவே அல்லவா? ஆகவே நீ செயல்படு. ஒவ்வொரு கணமும் செயல்படு. ஓடாமலும் உட்காராமலும் நிமிர்ந்து நட. உன் உன்னதமான குறிக்கோளை நோக்கி மனம் தளராமல், உறுதி குலையாமல் நடந்து கொண்டேயிரு. கிழக்கில் உதித்த கதிரவன் மேற்கு நோக்கிச் செல்வதைப் போலவே உன் செயலும் இருக்கட்டும்.

உன் குறிக்கோள் உயர்ந்ததாக இருந்தால் - இதை அடைவதில் நீ வெற்றி பெற்றால் அது உனக்கு மட்டும்தானா மகிழ்ச்சியளிக்கும்? இல்லை அந்த உன்னதமான வெற்றி உன் சந்ததிக்கு - உன் உற்றார் உறவினருக்கு - உன் ஊருக்கு - உன் நாட்டுக்கு - ஏன் இந்த உலகத்திற்கே மகிழ்ச்சியளித்தவனாகிறாய். ஆதர்ச ஆண்மகனாகிறாய்; மற்றவர்களால் போற்றத்தக்கவனும் நீயே ஆகிறாய்.

நீண்ட பிரயாணம் செய்யப் புகுந்த ஒருவன் தன் கட்டுச் சோற்றை வீணாக்க மாட்டான். தண்ணீர்க் குவளையை வற்றவிடமாட்டான். தன் கால் செருப்பையும் குடையையும் எறிந்துவிடமாட்டான்.

இவைகள் வழியில் அவனுக்குக் கனமானவைகளாக இருப்பினும்கூட ஏன்? இவைகள் அவனுடைய அத்யாவசியப் பொருள்கள். அவை அவனுடைய உழைப்பிற்கு உறுதுணைகள்.

நீ பெறும் ஊதியமும் இத்தகையதே. உன் குறிக்கோளை அடைவதில், உன் பிரயாணம் தங்குதடையின்றி இனிது முடிவதில் இன்று நீ ஈட்டும் ஊதியமே உறுதுணையாவது.

என் தோல்விகளிலிருந்து கற்ற பாடம் இது. என் தந்தையின் அவ நம்பிக்கையின், அறியாமையின் விளைவு என் தோல்வி. ஆனால் நீ ஒரு நல்ல அனுபவமுள்ள தந்தையைப் பெற்றிருக்கிறாய். இது ஒரு நல்ல வாய்ப்பு.

என் செல்வமே!

எழுது; ஏழுது; மேலும் மேலும் எழுது; எழுதிக்கொண்டேயிரு; கற்றுக் கொண்டே இரு உன் ஒவ்வொரு கணமும் செயலில் கழியட்டும்.

நீ இருப்பது வாடகை வீடா? சொந்த வீடா? என்பதெல்லாம் எனக்கு ஒரு பொருட்டாகப் படவேயில்லை. இது போன்றவை சின்ன விஷயங்கள். உன் மனத்திற்கு எங்கு இருந்தால் எப்படி இருந்தால் சௌகர்யமாக இருக்குமோ அப்படி இரு! அது எனக்கும் மகிழ்ச்சி!

கடைசியாக ஒன்று சொல்கிறேன். உழைப்புதான் செல்வம்; செல்வம்தான் நம் குறிக்கோளை அடைய உள்ள அரிய சாதனம். அறிவுதான் நமது உண்மையான நண்பன்; ஆற்றல்தான் நமது பிதுரார்ஜித மூலதனம்.

உங்களுடைய புது வாழ்வின் தொடக்கத்தில் என் ஆசிகளை விரும்பிக் கேட்ட உனக்கு நான் தரும் புத்திமதிகள் இதுவே. இவைகளே என் ஆசிகள். இவைகளே எல்லாம் வல்ல இயற்கையின் ஆசிகளும் ஆகும்.

உன் அப்பா,
வெள்ளியங்காட்டான்.

# 22.10.1961

இரத்தினபுரி காலனி

## நோய்நொடிகள் குழந்தைகளைத் தாக்க விடாதே!

அன்புச் செல்வி,

'வாழ்க்கை' என்ற சொல்லுக்குப் பலபொருள்கள் உண்டு. தத்தம் குழந்தைகளுக்காக உழைப்பது, கவலைப்படுவது - இதுதான் வாழ்க்கை எனினும் மறுப்பதற்கில்லை. தாயும் தந்தையும் தம் குழந்தைகளுக்காக மட்டுமே உழைக்கிறார்கள். கவலைப்படுகிறார்கள். ஆனால், ஒரு தாத்தா தன் குழந்தைகளின் குழந்தைகளுக்காகவும் உழைக்கவும் கவலைப்படவும் வேண்டியிருக்கிறது.

தற்சமயம் மனோகரன் இங்கு வருவதை நான் தடுத்துவிட்டேன். அடுத்த ஜனவரியில் தான் அவன் வரக்கூடும்.

சின்னப்பாப்பாவுக்கு உடம்பு சரியில்லை என்ற உன் செய்தியினால் என் மனத்திற்கு வருத்தம் ஏற்பட்டது. இப்போது பரவாயில்லை என்ற வார்த்தை உடனே

ஆறுதல் அளித்தது. இது போலவே அங்கு மழை பெய்திருக்கிறது என்ற வார்த்தையும் எனக்கு மகிழ்ச்சியளித்தது.

என்னுடைய விவசாயம் இதுதான். இங்குள்ள மக்களின் மனதைப் பண்படுத்தி நல்ல கருத்துக்கள் என்னும் விதைகளை நட்டிருக்கிறேன். கொள்கை, கோட்பாடு என்ற செடிகளையும் பயிர் செய்திருக்கிறேன். இவ்வாறு நான் வைத்த பயிர் பச்சைகள் நம்பிக்கை என்ற கிளையோடு நன்கு வளர்ந்து வருகின்றன.

பாபு தைமாதம் எப்போது வரும்? என்று கேட்கவே இதை அவனுக்கு உன்னால் விளக்கிச் சொல்ல முடியவில்லை என்கிறாய். இந்தச் சிரமத்தை உன் அப்பாவாகிய என்மேல் சுமத்திவிட்டாய். பாபு படிப்பில் கெட்டிக்காரன் என்று பெயர் வாங்கிவிட்ட அன்றே தைமாதம் வந்துவிடும் என்று நீ அவனிடம் சொல். அப்போதுதான் தாத்தா வருவார் என்றும் சொல்லிவை.

இறுதியில் உனக்கு ஒன்று சொல்லிக் கொள்ள அனுமதிப்பாய் என்று நம்புகிறேன்.

குழந்தைகளுக்கு அடிக்கடி உடல்நலமில்லை யென்பதிலிருந்து எனக்கு இதைச் சொல்ல வேணடும் ஏன்று தோன்றுகிறது.

நீ இன்னும் புனிதமான அன்னை என்னும் பாத்திரத்தை விளக்கிக்கொண்டு வகிக்கவில்லை. இனியாயினும் புரிந்து கொள். நோய்நொடிகள் குழந்தைகளைத் தாக்கவிடாதே. எச்சரிக்கையுடன் நட.

மற்றபடி நலம்,

உன் அப்பா

வெள்ளியங்காட்டான்.

# 25.10.1961

இரத்தினபுரி காலனி

## நான் என்னை மாற்றிக்கொள்ளப் போவதில்லை!

அருமை மனோகரன்,

உன் கடிதம் கிடைத்தது. அடுத்த விடுமுறையில் நீ இங்கு வருவதை நான் மிகவும் விரும்புகிறேன்.

இரவல் வீட்டை கைவிட்டதன் பயனாக இங்கு எனக்கு ஒரு சொந்த வீடு தயாராகிக் கொண்டிருக்கிறது. என்னை இங்குள்ள மக்கள் ஓரளவு புரிந்துகொள்ள சற்று காலம் நீடித்துவிட்டது. தம்மை மூடிக்கொண்டிருக்கும் காரிருளுக்கு ஒரு கைவிளக்காக தினமும் நான் செயல்படுகிறேன்.

எதைக் கற்றுக் கொள்ள நீ விரும்புகிறாயோ, எதைச் செய்ய உன் மனம் உன்னைத் தூண்டுகிறதோ அவற்றை நீ கற்பதிலும், செய்வதிலும் என் அனுமதி உனக்குத் தேவையில்லை. அது உன் சொந்த விசயம்.

நளினியை நீ உடன் பிறந்தவளாக நினைத்துக் கொள். இன்னும் ஒன்றிரண்டு மாதங்கள் வரை அவளுக்கு முடியுமானால் கொஞ்சம் பணம் உதவி செய். வாழ்க்கையில் அவளுடைய மனம் மிகவும் புண்பட்டிருக்கிறது. என் அளவில், குடும்பத்தில் கடந்த காலத்தில் நடைபெற்ற சம்பவங்களால் நளினியின் தூய இருதயத்தில் வெறுப்பும் சினமும் உண்டாக ஏதுவாயிற்று. அதற்கு ஒரே மருந்து நாம் அவளுக்கு ஓரளவு பணம் உதவுவதேயாம்.

உன் சிரமத்தை நான் உணராமலில்லை. உனக்கு நான் இனி என்றும் பாரமாக இருக்கமாட்டேன். நிச்சயம் தைமாதத்திலிருந்து என் உழைப்பு எனக்குச் சோறுபோடும்.

நான் என்றும் எனக்காக வாழவில்லை. இதுதான் நம் உற்றார், உறவினர் கண்ணில் படும் நான் செய்த தவறு. இனியும் நான் என்னை மாற்றிக் கொள்ளப் போவதில்லை. என் கடைசி மூச்சு வரையிலும் நான் பிறருக்காகவே வாழுவேன்.

நளினி மற்றவர்களை அனுசரித்து நடக்கவோ - நடக்காமலிருக்கவோ - எப்படியாவது இருக்கட்டும். மாமி, நளினியுடனோ, உங்களுடனோ வசிக்கட்டும். அதைப் பற்றிய எந்தவிதமான அபிப்ராயமும் எனக்கு இல்லை. அவைகளெல்லாம் அவர்களது சொந்த காரியங்கள்.

என்னைப் பொருத்தவரை நான் இனி ஒரு தனி மனிதன். நளினி இன்று பணமுடையால் சிரமப்படுகிறாள். அதற்கு நம்மால் ஏதாவது உதவ முடியுமா என்பதுதான் என் கவலை.

இது காறும் உன்னிடத்தில் நான் வாங்கியுள்ள பணத்தையும் திருப்பிக் கொடுத்துவிடவே முயலுவேன்.

இனிமேல் நான் உங்கள் எல்லோரிடமும் எதிர்பார்ப்பது அமைதியும் மகிழ்ச்சியும் கலந்த உங்களது நல்வாழ்க்கையே. உங்கள் அறிவும் ஆற்றலும் உங்களுக்கு உதவுவதாகுக!

உன் அப்பா,

வெள்ளியங்காட்டான்.

# 26.10.1961

இரத்தினபுரி காலனி

## எல்லாவற்றைக் காட்டிலும் பெரிய தவறு!

அன்புச் செல்வி,

"நான் ஆரோக்கியத்துடனும், மன நிம்மதியுடனும தான் இருக்கிறேன்" என்ற உன் கடிதத்தில் கண்ட வார்த்தையே எனக்கு ஆரோக்யமும் நிம்மதியும் அளித்தது.

தீபாவளி போனஸ் விவரம் நான் தினமணியில் படித்தறிந்தேன். பத்திரிக்கைகள் மூலமாக நான் தமிழ் நாட்டைப் பார்க்கிறேன். இத்துடன் கன்னட நாட்டையும் பார்க்கிறேன். இன்று நான் படித்த கன்னடப் பத்திரிக்கையில் ஒரு வாக்கியம் பிரசுரிக்கப்பட்டிருந்தது. அது கார்லைல் என்ற மேல் நாட்டு அறிஞருடையது.

இந்த ஆண்டு தீபாவளிக்கு நான் உனக்குத் தரும் பரிசு இதுதான்.

"எல்லாவற்றைக் காட்டிலும் பெரிய தவறு, நம் தவறுகளை நாம் அறிந்து கொள்ளாமலிருப்பதே" இந்த வார்த்தையின்

பொருள் அறிந்து வாழ்க்கையில் பயன்படுத்து. மகிழ்ச்சிகரமான வாழ்க்கையின் அடித்தளம் இதுவே. பொறுமை, சகிப்புத்தன்மையில்லாத ஒருவருக்கு வெற்றியும், மகிழ்ச்சியும் தூரமாகிவிடுகிறது.

இனி நீ எழுதும் ஒவ்வொரு கடிதத்திலும், குழந்தைகளின் நலத்தையும் போக்கையும் குறிப்பிடுவாய் என எதிர்பார்க்கிறேன். என் பேரன் பேத்திகளின் மழலை மொழிகள் அருகிலிருந்து கேட்டு அனுபவிக்கும் வாய்ப்பு இனி எனக்கு உண்டாகாது. நான் இனி உதிர்ந்து விட வேண்டிய பழுப்பிலை. ஆயினும் என்ன? என்னில் கிளைத்த என் மக்கள் என் பேரன் பேத்திகளின் நலன்களில் - மகிழ்ச்சியில் ஒருவிதமான பிடிப்பு இருக்கவே செய்கிறது. “கடந்த ஞானியராயினும் கடப்பரோ மக்கள்மேல் காதல்” என்ற நளவெண்பாவின் கருத்து நிதர்சனமாகிறது.

இறுதியாக நான் உனக்குச் சொல்வது இதுதான். குடும்ப கௌரவம் காப்பாற்றப் படவேண்டும். அது போலவே குடும்ப நலனும் மகிழ்ச்சியும் காப்பாற்றப் படவேண்டும்.

அக்காவிடமிருந்தும், மனோகரனிடமிருந்தும் கடிதங்கள் வந்திருந்தன. இந்தக் கடிதங்களே உங்களுடன் என்னை பிணைத்து வைக்கின்றன.

மற்றபடி யாவும் நலம்

உன் அப்பா

வெள்ளியங்காட்டான்.

# 16.11.1961

இரத்தினபுரி காலனி

## உலகம் ஒரு நிலைக்கண்ணாடி!

அன்புச் செல்வன்,

நலம்; நலம் விளைக! நான் இங்கு கன்னடப் புத்தகங்கள், பேப்பர்களில் தேடிப்பிடித்த ஒரு சில ரத்தினங்களை உனக்கு விற்றுவிட விரும்புகிறேன். ஒரு ரத்தினத்தின் விலை குறைந்தது 3-0-0 ரூபாயாக வைக்கிறேன். இதுவே என் முதல் வியாபாரம். உன் வரையில் கடைசி வியாபாரமும். நீ இதை வாங்கிக் கொள்ள மறுக்க மாட்டாயென்று நம்புகிறேன். எனக்கு இனி வேண்டிய பணத்தின் அளவும் இவ்வளவே, நிலத்தை உழுது பண்படுத்திய குடியானவனின் விதைத் தானியம் தேடும் முயற்சி போன்றதே என் இந்த வியாபாரமும். உன் தந்தையாகிய என்னைக் காப்பாற்று என்றோ - உதவி செய் என்றோ உன்னைக் கேட்கும் நிலைக்கு இன்னும் நான் கிழவனாகி விடவில்லை. கடனாகக் கொடு என்றே கேட்கிறேன். அதுவும் கடைசித் தடவையாகவே கேட்கிறேன் என்று நீ

அர்த்தம் செய்து கொண்டாலும் சரியே. எப்படியாவது எனக்குக் கொஞ்சம் பணம் தேவை. இங்கு என் நண்பர்கள் மூலம் இதை நான் சரி செய்து கொள்ள முடியும். எனினும் அது என் சுய மரியாதையைப் பாதிக்கும். அவர்களாக மனமுவந்து செய்யும் உதவிக்கு அதிகமாக நான் அவர்களிடம் எதிர்பார்ப்பதற்கு உரிமையே கிடையாது. எனக்கு எவ்வளவு பணம் வேண்டும் என்ற அளவு நான் இங்கு குறிக்கும் அறிவொளி வீசும் இரத்தினங்களின் எண்ணிக்கையிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

1. யாரும் சிங்கத்திற்கு அரசனென்று பட்டாபிசேகம் செய்து வைக்கவில்லை. அது தன் கம்பீரமான தோற்றம் சக்தி முதலியவைகளால்தானே மிருக ராஜா என்னும் பதவியை தேடிக்கொள்கிறது.

2. உலகம் ஒரு நிலைக் கண்ணாடி. யார் எப்படி இருந்தாலும் அவர்களுக்கு அது அப்படியே காண்பிக்கிறது. நாம் நம் பிரதி பிம்பத்தையே அதில் காணுகிறோம்.

3. யானை எந்த மரத்தின் நிழலிருந்து அதன் உடலலுப்பைத் தீர்த்துக் கொள்கிறதோ, அதையே பின்பு முறித்து எறிவது போல் நீசர்கள் தமக்கு ஆதாரமானவற்றையே நாசம் செய்து விடுவார்கள்.

4. தன் மக்களுக்குக் கடன் வைத்துவிட்டுச் சாகும் தந்தையே அவர்களுக்கு பெரிய சத்துரு.

5. நான் ஒரு தேசத்தின் தலைவனாக இருப்பதைவிட சத்தியத்திற்கு அடிமையாக இருப்பதையே மிகவும் விரும்புகிறேன்.

6. அன்புக்கு நீங்கள் வழிகாட்டிகளன்று. நீங்கள் உண்மையில் நல்லவர்களானால் அன்பே உங்களுக்கு வழிகாட்டியாகும்.

7. நம் துயரங்களை தீர்த்துக் கொள்ளச் சரியான வழி பிறர் துயரங்களை தீர்க்க முயலுவதே.

8. முழங்கால்களை ஊன்றி வாழ்வதைக் காட்டிலும் கால்களால் நின்று சாவது மேல்.

9. உலகம் ஒரு புல் கட்டு. மனிதர்கள் அதை அப்படியும், இப்படியும் இழுத்தாடும் கழுதைகள்.

10. தேன் இனிப்பானதுதான் அமிர்தம் அதைவிட இனிப்பானது எல்லாவற்றைக் காட்டிலும் இனிப்பானது கவிதை.

இவைகள் போதுமென்று நினைக்கிறேன். இந்தக் கடிதம் உன் கைக்குக் கிடைக்குமுன் நீ பணம் அனுப்பியிருந்தாலும் சரி இல்லாவிட்டாலும் சரி உடனே அனுப்ப முயற்சி செய். இந்தக் கடைசி முப்பது ரூபாய்கள்தான் என் விதைத் தானியம்.

தற்போது 13 கோழிகள் இருக்கின்றன. அரை ஏக்கரா பூமியில் கரு பூசணிக்காய் செடி போட்டு முளைத்திருக்கிறது. சாளை வேலை முடிந்தும் முடியாமலும் இருக்கிறது. இதற்கு நண்பர்கள் உதவி மிகவும் உண்டு. 8-0-0 ரூபாய்க்கு ஒரு பெட்டியும் வாங்கியிருக்கிறேன். கன்னட மொழி காலப்போக்கிற்கு ஒத்தாசையாக இருக்கிறது. பிரஜாவாணி, தினமணி பத்திரிக்கைகளும் வருகின்றன. கோழிப் பண்ணையை விசாலப் படுத்த கிராம சேவக் உதவியுடன் நடத்த திட்டமிட்டிருக்கிறேன். அரசாங்க உதவியும் கூடிய சீக்கிரம் கிடைக்க ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறேன்.

இவையெல்லாம் எனது நெடுநாளைய கனவுகள். இன்று நனவாகிக் கொண்டு வருகிறது. மற்றபடி எல்லோருடைய நலத்துக்கும்.

உடனே பதில்.

உன் அப்பா
வெள்ளியங்காட்டான்.

# 02.02.1962

இரத்தினபுரி காலனி

## தற்சமயம் நான் 1-4-0க்கு கடனாளியாக இருக்கிறேன்!

அன்புச் செல்வன் மனோகரன்,

நலம் நலமாகுக! இதற்குமுன் நான் எழுதிய இரண்டு கடிதங்களுக்கும் உன்னிடமிருந்து பதில் கிடைக்கவில்லை. நளினிக்கு எழுதிய கடிதத்திற்கும் பதில் இல்லை. அக்கா அங்கே வந்திருப்பாள் என்று நினைத்து புளியம்பட்டிக்கு நான் கடிதம் எழுதவில்லை.

உங்களிடமிருந்து கடிதமே இல்லாததால் என்னைச் சுற்றி ஒரு கனமான திரை கவிழ்ந்திருப்பது போன்றிருக்கிறது. இவ்வாறே இன்னும் சில நாள் இருப்பின் எனக்கு இதுவும் பழக்கமாகிவிடும். என்ன நேரினும் சரி. இங்கேயே இருப்பது என்று நான் முடிவு செய்துவிட்டேன். ஒரு சில மாதத்திற்கு மட்டும் உன் உதவியை இன்னும் நான் நாடியாகவேண்டும். பின்பு என் உழைப்பே என் வாழ்வுக்கு போதுமானதாகும் என்று நம்புகிறேன்.

இங்கு என்னால் நிம்மதியாக இருந்து எதுவும் செய்ய முடியும். என்னிடமிருந்து பணம் முழுதும் தீர்ந்து தற்சமயம் நான் 1-4-0க்கு கடனாளியாக இருக்கிறேன். ஆனால் இது போன்ற நிலைகளெல்லாம் எனக்குப் பழகிப் போன விசயங்கள்தான். இந்தக் கடிதத்திற்கும் உன்னிடமிருந்து பதில் இல்லையென்றால் நான் பூரணமான துறவியாகி விடுவேன்.

மற்றவை உன் கடிதம் பார்த்து

வெள்ளியங்காட்டான்

# 16.05.1962

இரத்தினபுரி காலனி

## நீ இன்னும் நிறையப் படிக்க வேண்டும்!

அன்புச் செல்வன்,

உன் கடிதம் கிடைத்தது. நிகழ்ச்சி நிரலையும் கண்டேன். நீண்டகால வாழ்க்கைப் பிரயாணத்தில் பேரறிஞர் பாதையில் நீ முதல் காலடி எடுத்து வைத்திருக்கிறாய் என்பதைக் காண இறும் பூதெய்துகிறேன். உன் ஆர்வமும் முயற்சியும் மற்ற வாலிபர்களுக்கு ஒரு அரிய எடுத்துக் காட்டாக விளங்கட்டும். இந்த நல்ல துறையில் உனக்கு வெற்றியாகட்டும்.

உன் பிரசங்க இறுதியில் கூட்டத்தின் கருத்து எவ்வாறு இருந்தது. என் பாடல்களை அவர்கள் எந்த அளவில் புரிந்து கொண்டு ரசித்தார்கள் என்பதை எழுது. வெறும் தற்புகழ்ச்சியாக இல்லாமல் மக்கள் கருத்தை அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

இந்த மாதம் எனக்குப் பணம் அனுப்பாவிட்டால் பரவாயில்லை. நான்

எப்படியாவது சமாளித்துக் கொள்ளுகிறேன். கோழிகளை விற்றதில் கொஞ்சம் பணம் கிடைத்தது. என்னைப் பற்றிய கவலை உனக்கு வேண்டாம். நீங்கள் அனைவரும் சுமூகமாகவும் மகிழ்ச்சியாகவும் இருக்கிறீர்கள் என்றால் அதுவே போதும்.

வீடுமாற்றம் பற்றி என்னால் ஒன்றும் கூறமுடியாது. எனினும் சரோஜினியை அனுசரித்து நடந்து கொள். எங்கு இருந்தால் சௌகர்யமோ அங்கிருப்பதுதான் நல்லது.

குமுதாவின் போட்டோ எனக்கு அவசியம் வேண்டும். ஆனால் நீ இதில் ஏன் இவ்வாறு காலம் கடத்துகிறாய் என்பது மட்டும் புரிய மாட்டேன் என்கிறது. நளினி இன்னும் கொஞ்ச காலம் லீவில் இருந்திருக்க வேண்டும். பச்சை உடம்போடு அளவுக்கு மிஞ்சி உழைத்தால் அது நல்லதல்ல. ஆயினும் நான் என்ன செய்யமுடியும்? என்னுடைய நலத்தையே என்னால் தேடிக்கொள்ள இயலவில்லையெனில் நான் இனி யாருக்கு நன்மை செய்ய முடியும்?

நளினி ஒரு முறை பாப்ப நாயக்கன் பாளையத்திற்கு என்னை வந்து செல்லும்படி எழுதியிருந்தாள் இது நளினி நினைப்பது போல் அவ்வளவு எளிதல்ல. இங்கு ஒரு நூறு ஜீவன்கள் என் கையை எதிர்பார்த்து ஒவ்வொரு நாளும் வாழ்கின்றன. இந்தக் கோழிக் குஞ்சுகள் மூலம் நான் இந்த உலகத்தையே காண்கிறேன். மனிதர்களிடமுள்ள அவ்வளவு இழி குணங்களும் கோழிக் குஞ்சுகளிடம் இருக்கின்றன. பொறாமை, வஞ்சகம், சண்டை, பேராசை ஒன்று கூட குறையவில்லை.

மிளகாய்ச் செடி நட வேண்டிய காலம் வந்துவிட்டது. இந்த வாரமே நடவு ஆரம்பமாகிவிட்டிருக்கிறது. இனி நான் இங்கிருந்து புறப்பட்டு வர அவகாசமே இல்லை. ஆடிமாதம் கழிந்து ஒரு சமயம் வரலாமென்று நினைக்கிறேன்.

"சம்பிரதாயத்திற்கு வெறும் பாவனைகளுக்குப் பலியாகாமல் எல்லாவற்றையும் தர்க்கரீதியென்ற வெளிச்சத்தில் வைத்து ஆராய வேண்டும். தள்ளுவதைத்

தள்ளி, கொள்ளுவதைக் கொள்ள வேண்டும். இந்த அம்சம் நளினியிடம் மிகவும் குறைவு.

அக்காளிடமிருந்து கடிதம் வந்திருக்கிறது. இந்த ஆண்டு விவசாயம் அக்காளுக்கு ஏமாற்றம் தரவில்லை. நளினியின் துன்பங்களும் ஒரு முடிவுக்கு வந்து கொண்டிருக்கிறது என்பது உன் கடிதம் மூலம் தெரிகிறது. உன்னைப் பற்றி நினைக்கும்போது மகிழ்ச்சி உண்டாகிறது. நான் உங்களிடமிருந்து எதிர்பார்ப்பதும் இதுதானே.

இங்கு ஒன்று கூற விரும்புகிறேன். தாழ்வின் எல்லை நமக்கு மிகவும் அருகில் இருக்கிறது. ஆனால் உயர்வின் எல்லை நமக்குத் தூரமாகவே இருக்கிறது. இந்த எல்லையை நாம் சென்று சேர இடைவிடாத முயற்சியும் எச்சரிக்கையும் அவசியம். நீ இன்னும் நிறையப்படிக்க வேண்டும். தொல்காப்பியத்தை ஐயமற ஆராயவேண்டும். கௌரவம், கீர்த்தி உண்பதில் உடுப்பதில் மட்டும் கிட்டுவதில்லை. அயராத உழைப்பில் அது பாலில் வெண்ணை போல் கலந்திருக்கிறது.

மற்றபடி உன் கடிதம் பார்த்து

உன் அப்பா

வெள்ளியங்காட்டான்.

# 15.06.1962

இரத்தினபுரி காலனி

## இந்த ஒரு குறையைத் தவிர...

அன்புச் செல்வன்

உன் கார்டு கிடைத்தது. கருத்தில்லாமல் எழுதிச் சுரத்தில்லாமல் தபாலில் சேர்க்கப்பட்டதுபோல் அது தென்பட்டது. எது எப்படியாயினும் சரி, அநேகமாக நான் ஒரு பழுத்த இலை. என்னால் இனி யாருக்கும் பயினில்லை. என் இதயத்தில் எந்தவிதமான பற்றுக்களும் இல்லை. ஒரு துறவி போலச் சிறுக என் மீதி நாட்களை இங்கேயே கழித்துவிடுவதே உசிதமாகப் படுகிறது. அதற்கேற்பவே சூழ்நிலையும் அமைந்துவருகிறது. எனினும் மனதின் ஒரு இடத்தில் என் கண்ணால் காணாத பேத்தி, சின்னப் பேரன்களின் நினைவுக் குறை இருந்தே இருக்கிறது. இந்த ஒரு குறையைத் தவிர எனக்கு வேறு எதுவும் இல்லை. எப்படிப் பார்த்தாலும் இது நீங்க முடியாததாகவே தெரிகிறது.

மற்றபடி வேறு செய்தி இல்லை

உன் அப்பா

வெள்ளியங்காட்டான்

# 05.07.1962

இரத்தினபுரி காலனி

## எப்படியோ சாப்பாடு கிடைக்கிறது!

அன்புச் செல்வன்,

தேதியிடப்படாத உன் கடிதம் கிடைத்தது. கடித வாயிலாய் நான் உன் இதயத்தைக் காண்கிறேன். வீரம் என்ற மின் விளக்கொளி உன்னில் இல்லை. இது எனக்குத் தெளிவாகத் தெரிகிறது. மனிதத் தன்மையை வெற்றுச் சொற்களைக் கொண்டு மட்டும் நிர்ணயித்துக் கொள்ளும் பழக்கம் என்னிடம் இல்லை. செயல் மூலமே அதை நான் நம்பும் பழக்கம் நீண்ட காலமாக இருக்கிறது. நீ என்னைப் புரிந்து கொள்ளாதவனாகவோ இல்லை புரிந்து கொண்டும் என் வழியில் நடக்க அசக்தனாகவோ இருக்கிறாய் என்பதை நான் அறிகிறேன்.

எனவேதான் உன்னை என் பந்தத்திலிருந்து என் அதிகாரத்திலிருந்து நீக்கி சுயேச்சை அளித்தேன். உன் வாழ்க்கை உன் எதிர்காலம் உன் பொறுப்பில் உள்ளது. அதை நீ எப்படி வேண்டுமானாலும் அமைத்துக் கொள். என் கோழிப் பண்ணை

வருமானம் பற்றி கேட்டிருக்கிறாய் அல்லவா? இது எதற்கு? ஒரு சிறு கோழிப் பண்ணையில் என்ன வருமானம் வந்துவிடும்?

உன்னை நினைக்கும்போது என் மனம் உண்மையிலேயே வருந்துகிறது. உன்னைப்பற்றி நான் என்றும் நீங்காத நம்பிக்கை வைத்திருக்கிறேன். அந்த நம்பிக்கை சென்ற சில மாதங்களிலிருந்து அடியோடு தகர்ந்து விட்டது. கெட்டாலும் வாழ்ந்தாலும் இனி உன் உதவிவேண்டாம். எனக்கு அனுப்பும் பணம் திருப்பி எதாவது ஒரு உருவில் பெருகி உனக்கு திரும்பி வரும் என்ற நம்பிக்கையில்லாத நிலையில் உன் உதவியை பெற நான் வெறுக்கிறேன். என் இதயம் ஒரு திறந்த புத்தகம். இதில் ஒளிவு மறைவு ஏதுமில்லை.

வெறும் மனிதனாக இருந்து கொண்டிருக்கிறேன். எப்படியோ சாப்பாடு கிடைக்கிறது. அது எங்கிருந்து கிடைத்தால்தான் என்ன? எனவே நீ இனி பணம் அனுப்பவேண்டாம். எங்கேயோ எப்படியோ நீ மிகவும் நல்லவனாக வாழ்கிறாய் என்றிருந்தால் போதும் வேறு செய்தி இல்லை.

உன் அப்பா,

வெள்ளியங்காட்டான்.

# 07.08.1962

இரத்தினபுரி காலனி

## நளவெண்பாவின் கருத்து நிதர்சனமாகிறது!

*அன்புச் செல்வி*

*27.7.62 தேதியிட்ட உன் கார்டு கிடைத்தது. என் மனம், சொல்ல வேண்டிய ஒன்றைச் சொல்லாவிடினும் புண்படும். சொல்லக்கூடாத ஒன்றைச் சொல்லினும் புண்படும். எனினும் இனி புண்படுவதென்பதில்லை. ஏனெனில் எத்தனையோ புண்கள் பட்டு ஆறித் தழும்பாகிவிட்டது.*

*நான் உங்களை விட்டுப் பிரிந்து வந்ததும் நீங்கள் என்னை விட்டுப் பிரிந்திருப்பதும் வருத்தப்படவேண்டிய விஷயமல்ல. ஏனெனில் என்றாவது ஒருநாள் இப்படிப் பிரிந்து தீரவேண்டியது இயல்பு. நாளை நிகழ்வது நேற்று நிகழ்ந்து விட்டது. அவ்வளவுதான். காலக்கிரமத்தில் நிரந்தரமாகப் பிரிவதற்கு இது ஒரு ஒத்திகை.*

*அக்கா இரண்டு வாரங்களுக்கு முன் ஒரு கடிதத்தில் பா.நா. பாளையம் வருவதாக எழுதியிருந்தாள். அதற்குப் பின் கடிதமில்லை. அக்கா வந்து விட்டுச்*

சென்றாளா என்பதையும் அவர்களின் நலத்தையும் குறிப்பிடுவாய் என்று எதிர்பார்க்கிறேன். என் பேரன் பேத்திகளின் இளங்குதலை மொழிகள் அருகிலிருந்து கேட்டு அனுபவிக்கும் வாய்ப்பு இனி எனக்கு உண்டாகாது.

நான் இனி உதிர்ந்துவிட வேண்டிய பழுப்பிலை. ஆயினும் என்ன? என்னில் கிளைத்த என் மக்கள், என் பேரன் பேத்திகளின் நலன்களில் - மகிழ்ச்சியில் ஒரு விதமான பிடிப்பு இருக்கவே செய்கிறது. "கடந்த ஞானியராயினும் கடப்பரோ மக்கள் மேல் காதல்" என்ற நளவெண்பாவின் கருத்து நிதர்சனமாகிறது.

இறுதியாக நான் உனக்குச் சொல்லுவது இதுதான். குடும்ப கௌரவம் காப்பாற்றப் படவேண்டும். அது போலவே குடும்ப நலனும் மகிழ்ச்சியும் காத்து வளர்க்க வேண்டும்.

அக்காளிடமிருந்தும் மனோகரனிடமிருந்தும் கடிதங்கள் வந்திருந்தன. இந்தக் கடிதங்களே உங்களுடன் என்னைப் பிணைத்து வைக்கின்றன.

மற்றபடி யாவும் நலம்

உன் அப்பா

வெள்ளியங்காட்டான்

# 13.08.1962

இரத்தினபுரி

## ஐயங்கள் கூடவே எழுகின்றன!

அன்புச் செல்வி,

உன் கடிதம் கிடைத்தது. இரண்டு நாள் சிந்தித்தேன். தைமாதம், சித்திரை மாதம், ஆடி மாதம் என்று நான் இது வரையும் சொல்லி வந்த எல்லா மாதங்களும் வந்து சென்றுவிட்டன. திரும்பும் என் பிரயாணம் இன்னும் நிறைவேறவில்லை. என் வார்த்தைகளும் பொய்துவிட்டன. இப்படி நான் இருந்து என்ன சாதிக்க இருக்கிறேன்? இல்லை அங்கு வந்து தான் என்ன சாதிக்கப் போகிறேன்? எங்கிருந்தாலும் நான் செய்யக் கூடியது எதுவுமில்லை. உங்களுக்கெல்லாம் சிரமம் கொடுக்காமல் இங்கேயே என் காலத்தை கழித்து விடுவதுதான், நினைத்துப் பார்த்தால் மிகவும் சரி என்று தோன்றுகிறது. எனினும் ஒரு முறை அவசியம் வருகிறேன். இன்று மனோகரனிடமிருந்து மணியார்டர் வந்திருந்தது.

கோழிகளை எல்லாம் நான் விற்றுவிட்டேன். ஒரே ஒரு குஞ்சு மட்டும் மீதி விட்டிருக்கிறேன். தற்போது எனக்கு எந்தவிதமான பொறுப்பும் இல்லை. வெறும் ஆள். எப்போது வேண்டுமாயினும் நான் புறப்பட்டுவர இயலும். ஆனால் அங்கு வந்து என்ன செய்வது? எங்கே இருப்பது? என்ற ஐயங்கள் கூடவே எழுகின்றன. என் மனதிற்கு நானே இன்னும் சமாதானம் சொல்ல வேண்டியதாக இருக்கிறது. எதற்கும் அடுத்த கடிதத்தில் விவரமாக எழுதுகிறேன்.

உன் அப்பா
வெள்ளியங்காட்டான்.

# 05.11.1962

இரத்தினபுரி காலனி

## தமிழ்நாட்டில் நேசிக்கக்கூடியது எதுவுமில்லை!

அன்புச் செல்வி,

உன் கடிதம் கிடைத்தது. நான் என் எழுத்து வேலையைத் தொடங்குமுன் என் பேரன் பேத்திகளை ஒருமுறை கண்குளிரப் பார்த்தபின்தான் பேனா எடுக்கிறேன். மகேந்திரன் நெற்றியில் இட்டிருக்கும் பொட்டு, அவன்தலையில் முடிந்திருக்கும் மலர்ச் செண்டு, ரவீந்திரன் கோர்க்கப்பட்டிருக்கும் அழகுக் கரங்கள்; குல்லாய் வைத்திருப்பது போல் அடர்ந்து கருத்திருக்கும் கூந்தல், ஆழ்ந்த சிந்தனையுடன் கூடிய உன் முகச் சாயல் முழுதும் ரவியின் மூலம் கண்டு இன்புறுகிறேன். ஆயினும் என்ன? என் பேத்தி குமுதமே என்னை அதிகமாக மகிழ்விக்கிறாள். என்மேல் பல குற்றச்சாட்டுகளை அவள் குறுகுறு பார்வை அள்ளி வீசுகிறது. நானும் ஒரு பைத்தியம் போல் சிரித்துக் கொள்கிறேன்.

என் பிரதி பண்ணும் வேலையும் முடியும் தறுவாய்க்கு வந்துவிட்டது. அதிகமாகப் போனால் இன்னும் 10 நாட்கள்தான். அதற்குள் முடிந்துவிடும். என்னிடம் கொஞ்சம் பணம் இருக்கிறது. ஆனால், அது என் நண்பரிடம் கொடுத்து வைத்திருக்கிறேன். கிட்டத்தட்ட 110-0-0 ரூபாய் இருக்கும். அந்தப் பணம் என் கைக்கு வரவேண்டுமானால் நான் தைமாதம் வரையும் இங்கு காத்திருக்க வேண்டும். நெல் அறுவடை தை மாதம்தான். அறுவடையானதும் நான் நிச்சயம் புறப்படக் கூடும். மொத்தம் என்ன செலவாகும் என்று என்னால் திடமாகச் சொல்ல முடியாது. ஆயினும் எனக்கு வெற்றி நிச்சயம் என்ற நம்பிக்கை மட்டும் இருக்கிறது. மனோகரனிடமிருந்து கடிதமே இல்லை. மனோகரன் உப்பிலிபாளையத்தில் இரவுப்பள்ளி தொடங்க இருப்பதாக இங்கு வந்தபோது சொன்னான். பண விசத்தைப் பற்றி எதுவும் அவனிடம் சொல்ல நான் தயங்குகிறேன். அங்குள்ள நிலைமை என் சௌகர்யத்திற்கு ஒருக்கால் பொருந்தாமலும் இருக்கலாம். நான் யாருக்கும் தொந்தரவு தரமாட்டேன். எனவே நான் காத்திருக்க வேண்டியதுதான் நல்லதாகப் படுகிறது. ஆயினும் என்ன? என் புத்தகம் அச்சாகி வெளிவருமானால் உன் தந்தை எவ்வளவு பெரிய காரியத்தைச் சாதித்திருக்கிறார் என்பது உனக்கும் புரிந்துவிடும். உன் தந்தையின் உள்ளம் எத்தனை விசாலமானது, எத்தனை ஆழமானது என்பதும் விளங்கும். உனக்கு மட்டும் அன்று. தமிழ்நாட்டுக்கே அப்போதுதான் புரியப்போகிறது. இன்னும் இரண்டொரு மாதங்கள் காத்திருந்து பார். நான் இங்கிருந்து புறப்படுவதொன்றே - அதற்கேற்ற சௌகர்யங்களைத் தேடிக் கொள்வதொன்றே இனி என் முன்னிருக்கும் வேலை. இது புத்தகமானால் எனக்குக் கொஞ்சம் வருமானம் கிடைக்கும் என்பதில் ஐயமில்லை. அதுவும் என் ஆயுள் வரையும் கிடைக்கும் என்பதில் தடையிருக்காது. அதற்குப் பின்தான் நான் ஆந்திராவிற்குச் செல்வேன். அல்லது பெங்களூரில் தங்கி வசிப்பேன். எப்படியிருப்பினும் ஒரு தடவை பாண்டிச்சேரி சென்றபின் தமிழ்நாட்டிற்கு வரவே

செய்வேன். ஆனால் நிரந்தரமாக இனிநான் தமிழ்நாட்டில் வாழவே மாட்டேன் என்பது மட்டும் நிச்சயம். தமிழ்நாட்டில் நேசிக்கக்கூடியது எதுவுமில்லை.

என் அன்பு மகளே நீ என்றும் எந்த நிலையிலும் ஒரு மல்லிகை மலராகவே இரு! உன்னிடத்திலிருந்து கமழ்வது நறுமணமாகவே இருக்கட்டும். பிறரைப்பற்றி நீ வருத்தப்படாதே! மற்றவர்களெல்லாம் மல்லிகையாகவே இருக்கவேண்டுமென்று ஆசைப்படாதே; எதிர்பார்க்காதே!

மனச்சோர்வு என்ற இருளுக்கு இலக்காகாதே, உற்சாகம் என்ற ஒளிவிளக்கை ஏற்று. மௌனமாக உன் கடமைகளைச் செய். ஆனந்தம் என்பது அன்பில்தான் நிறைந்திருக்கிறது. கோடீஸ்வரன் வீட்டிலும் தினசரி துக்கங்கள் இல்லாமலில்லை. ஏழையின் வீட்டிலும் சாந்தி ஒளிவீசவே செய்கிறது. அடிக்கடி எழுது.

உன் அன்புத் தந்தை

வெள்ளியங்காட்டான்.

# 24.11.1962

விருத்தாசலம்

## பாண்டிச்சேரி வந்தது வீணாயிற்று!

அன்பு செல்வன்,

23ம் தேதி மாலை 7 மணிக்கு நான் பாண்டிச்சேரி சேர்ந்தேன். விசாரித்ததில் பாரதிதாசன் சென்னையில் இருப்பதாகத் தெரிந்தது. வந்தும் வீணாயிற்று. சென்னைக்குச் செல்லலாமா என்று சிந்தித்துப் பார்த்தேன். ஒரு கால் அதுவும் வீணாகி விடலாம் என்ற ஐயம் கூடவே எழுந்தது. எனவே அங்கிருந்து புறப்பட்டு விருத்தாசலம் வந்து சேர்ந்தேன். எவ்விதமாயினும் 25ம் தேதி மாலை அல்லது 26ம் தேதி காலை புளியம்பட்டிக்குச் சென்று விடுவேன். நீ இந்தக் கடிதம் கண்டவுடன் அங்கு வருவது பற்றிக் கடிதம் எழுது. நளினி எனக்கு எழுதியிருந்த கடிதம் நான் புறப்படும்போதுதான் கிடைத்தது. அக்கா, குழந்தைகள் அங்கு வந்திருப்பதாக எழுதியிருந்தாள். புளியம்பட்டியில் உன் கடிதத்தை ஆவலுடன் எதிர்பார்க்கிறேன்.

உன் அப்பா

வெள்ளியங்காட்டான்

பி.கு: பாரதிதாசன் தங்கம்மா பாரதி போன்றோரோடு ஒரே மேடையில் உரை நிகழ்த்திய அனுபவத்தோடுகூட பாரதிதாசனின் நட்பும் இருந்ததால் தம்முடைய கவிதை நூல் பற்றி அவரின் கருத்தையும் அதை வெளியிடுவது குறித்து சில ஆலோசனைகளையும் கேட்டு அறிந்து கொள்ளும் பொருட்டே அவர் பாண்டிச்சேரி சென்றார். ஆனால் அங்கும் அவரை ஏமாற்றமே தொடர்ந்தது.

# 29.12.1962

புளியம்பட்டி

## வந்த காரியம் ஒருவாறு நிறைவேறிவிட்டது!

அன்புச் செல்வன்,

நீ ஆள் வசம் கொடுத்தனுப்பிய கடிதம் கிடைத்தது.

என் அருமைக்குழந்தைகளாகிய உங்களுக்கு எந்த ஒரு பொருளையும் தேடிக் கொடுக்க அசக்தனாக இருந்தேன். ஆம் சாதாரண மக்கள் கண்ணோட்டத்தில் நான் இந்த அர்த்தத்தில்தான் இன்று தென்படுகிறேன். ஆனால், நான் காலமெல்லாம் தேடியது முப்பொருள். அது உங்கள் மூவருக்கும் சொந்தம். அதைப் பராமரிக்கும் பொறுப்பு உன்னுடையது. அதை நீ என்ன வேண்டுமாயினும் செய். எப்படிச் செய்தால் நல்லது என்று தெரிகிறதோ அப்படிச் செய்.

ஆனால் ஒன்று. உன்மூலம் இந்தத் தமிழ்நாட்டாருக்கும் அது சொந்தமானது என்பதை மட்டும் மறக்க வேண்டாம்.

இனி புத்தக விசயமாக - அதில் ஏதாவது மாறுதல், சீர்திருத்தம், ஐயப்பாடு போன்றவைகளைத் தவிர்த்து என்னை எதுவும் எதிர்பார்க்க வேண்டாம்.

நேற்று முன் தினம் மைசூரிலிருந்து கடிதம் வந்திருந்தது. என் வரவை மீண்டும் அவர்கள் விரும்புகிறார்கள். இங்கு என் காலம் வீணாகிக் கொண்டிருக்கிறது.

என் முதன்மையானதும், அவசியமானதுமான விருப்பம் குமுதா, ரவீந்திரன் இவர்களைப் பார்ப்பது. அது ஏற்கனவே நிறைவேறிவிட்டது. இரண்டாவதுதான் புத்தகம். அது என்னைப் பொறுத்தவரையும் அவ்வளவு அக்கரையில்லை. அது உன்னுடையது. உன்னிடம் ஒப்படைத்து விட்டேன். எனவே நான் வந்த காரியம் ஒருவாறு நிறைவேறிவிட்டது.

மற்றபடி உன் வரவை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன்.

இங்கு அனைவரும் நலம்

உன் அப்பா
வெள்ளியங்காட்டான்.

# தந்தையைப் பற்றி

நான் எதைப் பற்றிப் பேசுவேன்? பொங்கிப் பெருகும் என் இதயத்திற்கு எதைக் கொண்டு அணை கட்டுவேன்?

நான் ஒரு தாய்! அத்தாய்மை உணர்ந்த பெண் இனத்தால் மட்டுமே உணரப்பட்ட அந்த ஜீவ மரணப் போராட்டத்தினோடு கூடிய வலியில் பெற்றெடுத்த அருமைக் குழந்தைகளின் எதிர்காலம் பற்றிய கவலையால், உடைந்த உள்ளத்தின் மூலமாக செயலற்ற இவ்வெழுத்தின் மூலமாக நான் எதைப் பற்றிப் பேசுவேன்?

இயற்கை அன்னை நமக்கு வழங்கிய மாபெரும் செல்வங்களை நாம் தொலைத்தாயிற்று! உயிரை இயக்கும் காற்றை முடிந்தவரை அசுத்தப் படுத்தியாயிற்று! ஒழுக்கம், அன்பு, பண்பு, ஒற்றுமை போன்ற அனைத்தையும் கை கழுவிவிட்டோம். இனி வேறு என்ன? மிச்சம் மீதியாக – சாட்சியாக...

'ஒரு பாலியல் தொழிலாளியின் சுய சரிதம் தேசத்தின் எல்லை வரை சென்று வாசகர்களின் அமோக ஆதரவைப் பெற்றதோடு, ஊடகங்கள், கணினி போன்றவற்றின் துணையோடு விற்பனையில் சக்கைப்போடு போடுகிறது'

என்கிறது பத்திரிக்கை செய்தி. இதை விடவும் வேறென்ன வேண்டும் நமக்கு?

ஆண்களை திருப்திப்படுத்த பாலியல் பெண்களும், பெண்களைத் திருப்திப் படுத்த பாலியல் ஆண்களும், அதைப் பற்றி எடுத்துச் சொல்ல சில சுய சரித்திரங்களும் போதுமே! இனி இந்த இந்தியத் தாய்க்கு வேறென்ன பெருமை வேண்டும்? நாட்டை உய்வித்து உயர்வடையச் செய்ய?

நல்ல இலக்கியங்காளா? யாருக்குத் தேவை? அது எதற்கு வேண்டும்? அதன் பயன்தான் என்ன? 'கடவுளே...! நீ எங்கேயிருக்கிறாய்? உன் கண்களும், காதுகளும் உன் சாபமிடும் வாயும் செயலற்றுத்தான் போய்விட்டதா?

யுத்தம் ஒரு நாள் நின்றுவிடும். தீவிரவாதம் ஒரு நாள் ஒழிந்து விடும். ஆனால் இந்த மானிடவர்கத்தின் மகத்தான வாழ்வு...!?

மனித மனங்களில் இருள் சூழ்ந்துள்ளது. பொய்மையால் அவன் நிரப்பப் பட்டிருக்கிறான். அவனுக்கு விழிப்புணர்வு என்கின்ற வெளிச்சம் வேண்டும். இந்த உண்மையற்ற பொய்யான காரிருளை நீக்க, மானிடத்தின் நன்மையை நாடும், ஒவ்வொருவரும் ஒரு கைவிளக்காக வேண்டும். முடியுமா?

வாழ்வின் உண்மைச் சுவையறியாது, சுகம் அறியாது பேரின்பம் என்ற பேற்றை அறியாது அழிவை நோக்கிச் சென்று கொண்டிருக்கும் என் தாய் நாடே, உன் விடுதலை எப்போது? உன் கை விலங்கைக் கண்டுதான் ஒரு கவிஞன் இவ்வாறு பேசுகிறான்.

ஒரு கவிஞனின் இதயத்தை அறிந்து கொள்ள அவனை இனம் கண்டு கொள்ள இக்கடிதங்களே போதுமானதுதான். ஆனால்...?

அவரைப் பின் தொடர்ந்த வறுமையை, துன்பத்தை, சமுதாய ஒதுக்கலை, தனிமையை – 'பேதமை' என்றோ அல்லது தமக்குத் தாமே விதித்துக் கொண்ட 'சவால்' என்றோ கருதி, தம் கொள்கைகளை உறுதியோடு பின்பற்றியவர் அவர் என்பதை என்னால் கூறாமல் இருக்க முடியவில்லை.

தோளோடு தோள் நின்று, இணைந்து வாழ்க்கை சுமைகளை பகிர்ந்து கொண்டு 35 வயதில் தம்மைப் பிரிந்து போன துணைவியின் இழப்புதான் அவரது பேரிழப்பாகும்.

அவர் அச்சம் என்பதையே அறியாதவர் ஒரு சமயம் தம் கிராமத்தில் தலித்துகளுக்கான குடிநீர் போராட்டத்தில் மேற்குடிமக்கள். இவர் தங்களை அடித்துவிட்டதாக பொய் வழக்குத் தொடுக்க ஃபைன் கட்டி விட்டு வரும் வழியில், வழிமறித்து வழக்குத் தொடுத்தவரை இரண்டு அறை வைத்து 'இப்போது கணக்கு நேராகிவிட்டது' என்றாராம்.

பாட்டி இதை அடிக்கடி சொல்லிவிட்டு இன்னொரு விசயத்தையும் சொல்வார். உங்க அப்பாவை என்னன்னு நெனச்சே, 5 வயசுலே தப்பான ஒரு வார்த்தையை சொன்னான்னு ஒன் தாத்தா பிரம்பாலே அடிஅடின்னு அடிச்சும் உங்கப்பன் திரும்பத் திரும்ப அதையே சொன்னான். இடுப்பிலே கயித்தைக் கட்டி கெணத்துலே வுட்ட போதும் அதையே சொன்னான். தண்ணிய தொட்டுவிட்ட போதும் அந்த வார்த்தையையே சொல்ல, தோத்துப் போன தாத்தா பேசாம போயிட்டாரு. அவனுக்கே அவன் அது தப்பானதுன்னு தெரிஞ்ச பின்னாலே தா. அத அவன் வுட்டுட்டான்'' என்று

ஆம்...! அவர் அப்படித்தான்...!

பெரும் போராட்டத்திற்குப்பின் அவரின் கவிதை நூலொன்று வெளிவந்தது. அவர் அதை குழந்தையைப் போல் அணைத்துக் கொண்டார். அவரது கனவு நனவாகிவிட்ட களிப்பு! எதிர்கால வறுமைக்கு சிறு விடிவு... என நம்பிய வேளையில், 'காலம்' நகைத்தது. கவிஞர்களின் கனவுகளை நம்பிக்கைகளை தகர்த்து சிதைத்து விடுவதில் காலம் எப்போதும் தோற்றுப் போய்விட்டதாகச் சரித்திரம் இல்லை. ஆம்...! அதுதான் நடந்தது. ஒரு புத்தகம்கூட விற்காத அறிமுகப்படுத்தாத நிலையில், பசி தன் வேலையை துரிதப்படுத்த பழைய பேப்பர்காரன் ஆரணாவிற்கு அவைகளை அள்ளிக்கொண்டு போக நான் கண்ணீர் விட்டேன்.

அந்த இரும்பு மனிதரோ சிரித்தார். சிரித்தவாறே "எதற்காக அம்மா நீ, அழவேண்டும்? இதில் பட்டாணியோ கடலையோ வாங்கிக் கொரிப்பவன் நம் கவிதையைப் படித்து, ஆகா..! என்ன அருமையான க்விதை எனப் பாராட்டுவான். பிறகு பாரேன்! அடுத்து வரும் நம் கவிதைத் தொகுதி எப்படி சக்கைப் போடு போட்டுக் கொண்டு விற்கப்போகிறதா...? இல்லையா?'' என்று நானும் பார்த்தேன் சத்தான கவிதைகள் சக்கையாய் திரும்பியதை.

அவரின் கவிதைகள் நீண்ட காலமாக அவள் வந்து கொண்டிருந்த ஒரு நாளிதழில் வேலை கிடைத்தது. இருபது கிலோ மீட்டர் நடந்தார். ஒரே ஒரு ரூபாய் கூலிக்காக ஆயினும் கூட அவர் நொந்து கொண்டோ, அலுத்துக் கொண்டோ நான் பார்த்ததில்லை. தமிழகம் தவிர வேறு எந்த ஒரு நாட்டினும், ஒரு கவிஞனுக்கு இத்தகைய கதி நேர்ந்திருக்காது.

அவர் அடிக்கடி சொல்வதுண்டு. 'என்னைப் போன்ற ஒரு கவிஞன் வாழ தமிழ்நாடு ஏற்புடையதல்ல என்று.

'ஒரு நாட்டிற்கு அரசனாய் இருப்பதைக் காட்டிலும் சத்யத்திற்கு அடிமையாய் இருக்கவே விரும்புவேன்' என்று வாக்கியம் அவருக்கு மிகவும் பிடித்து வாழ்ந்ததால்தான் தமிழகத்திற்கு அவரைப் பிடிக்காமல் போய்விட்டதோ என்னவோ?

நான் பஞ்சாலையில், 'தொழிலாளியாய்' வேலை பார்த்த ஒருநாள், என் தலையிலிருந்த பஞ்சைப் பொருக்கியவாறு, "கவிஞனுக்கு தமிழகம் தந்த சிறந்த பரிசம்மா இது", என்றபோது என் உள்ளம் விம்மியது.

''தலை நிமிர்ந்து நிற்பேன், மொழியால் தமிழ் என்றுரைப்போன்" என்று கவிதை எழுதியவர், அறுபது வயதில், சூழ்நிலை காரணமாக வீட்டைவிட்டு வெளியேர நினைத்தபோது மனம் தமிழக எல்லை வரை சென்று தேடியிருக்கும். ஆனால், இங்கு அவரை ஏற்றுக் கொள்ள நாடோ, உடன்பிறப்போ, சுற்றமோ, நட்போ, கவித்வமோ, ஊ...கும்... தமிழகத்தில் எதுவும் செல்லுபடியாகவில்லை போலும்.

கர்நாடகாவிற்குச் சென்றார். யார்...? எப்படி அவருக்கு அறிமுகம் என்பதை இதுவரை அறியோம். அவர் உழைத்தார் மண்வெட்டி கொண்டு கவிதை எழுதிய கை, மண்வெட்டியையும் மகிழ்வோடு ஏற்றுக்கொண்டது.

என் 'சுயம்' ஒரு சமயம் குடும்ப சூழலில் சிறிது பாதித்தபோது அவர் கேட்டார். "நீ வயிற்றுச் சோற்றுக்காகவோ வாழ்கிறாய் அம்மா!'' என்று பாரத தேசத்தில் பெண்மை பிறந்துவிட்ட பிறகு சுயமாவது...? சுரணையாவது...?

ஆனால் கவிஞனுக்கு அது உயிர் போன்றது. சுயமரியாதை இழந்து வாழ்வதைக் காட்டிலும் உயிர் துறப்பது அவனுக்கு எளிது.

புற்று நோயிற்கிலக்கான ஒரு நாள் நான் கேட்டேன், ''ரொம்ப வலிக்கிறதா?'' என்று. என்னை ஒரு கணம் உற்றுப்பார்த்தார். என்ன பார்வை அது? கோபமா? வெறுப்பா? வேதனையா? அனைத்தும் கலந்த ஓர் கலவையா? "ஆம்! வலிக்கிறது. உன் கேள்வியால் ரொம்ப வலிக்கிறது. கவிஞன் என்பவன் காலத்தை கடந்து நிற்பவன். அவனுக்கு வாழ்வும் சாவும், சுகமும், துக்கமும் ஒன்றே. இந்த நோய் எனக்கு ஒரு பொருட்டல்ல. நான் இதை எதிர்த்துப் போராடுவேன். வெற்றி பெறுவேன் என்றவர், அந்த வலியை - மரண வலியை - ஒரு முக்கல் முனங்கலின்றி - ஏன்? ஊ...ம் என்ற ஒரு பெருமூச்சும் கூட இன்றி அந்த நோயை, மென்று, தின்று, விழுங்கிச் சலனமின்றி யாருடைய உதவியும் எதிர்பார்க்காமல் அமைதியாக மரணத்தை எதிர்கொண்டதன் மூலமாக ஆம்..! அதை அவர் வெற்றி கொண்டார் என்பதுதானே உண்மை.

இப்படிப்பட்ட உறுதிமிக்க துணிவுமிக்க என் தந்தைக்காக - இன்றைய சமுதாயம் அவரை கண்டு கொள்ளாதபோதும், இலக்கியவாதிகள் அவரின் எழுத்தை புறக்கணித்த போதும், நாளை - ஒரு நூறு வருடத்திற்குப் பின்பேனும் அவை பேசப்படும். உண்மைக் கவிஞனை அவன் எழுத்தை ஒட்டு மொத்தமாகப் புதைத்துவிட இயலாது என்ற நம்பிக்கையோடு, தொடர்ந்து அவனது நூல்களை வெளியிடுவேன். அதிகம் படிக்காத அறிவிலியாக நான் இருந்த போதிலும்கூட அவைகள் காத்திருக்கும் தகுதியறிந்து தழுவும் கரங்களுக்காக...!

- வெ.இரா. நளினி

# சு.ரா.வின் 'அதுதானே கேட்டேன்'

கோவை பாரதிய வித்யா பவனில் நடந்த ஒரு புத்தக வெளியீட்டு விழாவில் கலந்து கொள்ள வந்த சு.ரா. அவர்களிடம், என் தந்தையின் சில வெண்பாக்களைக் கொடுத்தேன். படித்தவர் "இது எப்போது எழுதியது?" என்றார்.

"சுமார் 25 வருடங்களுக்கு முன்னால்"

"அதுதானே கேட்டேன்" என்றவர், கீழே வந்த லிப்டில் புகுந்து விட்டார். பின்னர், இதன் விளக்கம் என்ன?' எனக் கேட்க நினைத்தபோது அவர் நம்மிடம் இல்லை. ஆனால்..!

இன்று என் தந்தையின் கடிதங்களை வெளியிடும் நிலையில் 'சு.ரா' வின் கட்டுரைகள் காணக்கிடைத்தது. அதில் சில வரிகளின் உண்மை நெஞ்சில் நெருப்பை மூட்டின.

'இங்கு கலைஞன் - பச்சைப் பொய்களின் மொத்த விற்பனையாளர்களையும் - கலைஞன் என்றே அழைக்கிறோம். ஆனால், அவன் கலைஞன் எனில், இன்றைய பொக்கான நிறுவனங்களுக்கும், போலியான அரசியலுக்கும் எதிராக இயங்கக் கூடியவன் எனில், அல்லது தனது

எளிய துறைகளின் சிறு வட்டங்களில், மணமொப்பி உண்மையைத் தேடிச் சென்றுவிட்டான் எனில், நம் தமிழ் சமூகம் எதிர்கொள்ளும் விதமே மிகத் தந்திரமானது.

அவன் அலட்சியப்படுத்தப்பட்டு, அவனது இருப்பே அறியப்படாது. அவனை ஒப்புக்கு ஏற்று புன்னகையுடன் குழிதோண்டிப் புதைத்து விடுகிறது. இவர்களின் கலாச்சாரக் கொலைகள் உயிர் கொலையில் திளைத்து, சர்வாதிகாரிகளைக் கூட நாணமுறச் செய்துவிடும்.

- நன்றி. சு.ரா. அவர்களின் கட்டுரையிலிருந்து

ஒரு இலக்கியவாதியின் இதயத்திலிருந்து கனன்று எழுந்த சொற்கள் இவை. இம்மாதிரியான கருத்துக்களை, மிகுந்த சினத்துடன் என் தந்தை உரையாடக் கேட்டிருக்கிறேன்.

107 பல்கலைக் கழகங்களுக்கான முகவரிகளையும், 20க்கும் மேற்பட்ட மாத, வார, தின நாளிதழ்களுக்கான முகவரியையும் சிரமத்துடன் சேமித்துக் கொடுத்தவர் 'புவியரசு' அண்ணா அவர்கள்தான். அத்தனைக்கும் என் தந்தையின் இரு நூல்களை அனுப்பிவைத்தேன். தினமணியில் நான்குவரி விமர்சனம் தவிர வேறு எந்த விமர்சனமும் எதிலும் எழுதப்படவில்லை. அது தவிர, இருநூல்களையும் சேர்த்து 500 பிரதிகளை இலக்கிய மன்றங்களில் நடைபெற்ற விழாக்களில் தமிழ் பேராசிரியர்களுக்கும், இலக்கிய வாதிகளுக்கும் அளித்துப்படித்து இரண்டுவரி எழுதுங்கள் என்று இரஞ்சினேன். ஏனெனில் நானோர் அறிவிலி.

என் நான்காண்டுக் கல்விக்கும், பழந்தமிழ் இலக்கியத்திற்கும், கவிதைக்கும் என்ன தொடர்பு இருந்துவிட முடியும்?

ஒரு பஞ்சாலைத் தொழிலாளியாகவும், குடும்பப் பெண்ணாகவும், கடமையாற்றிய எனக்கு, சு.ரா வைப்போல், இலக்கிய உலகைப் பற்றிய உண்மைகளை அறிந்து கொள்ள இயலாது போயிற்று. சிறு குழந்தை, ஒரு மிட்டாய்க்கு ஏங்குவது போல, இரண்டு வரி எழுத்திற்காக நான் ஏங்கினேன்.ஆனால்...?


அந்தக் கவிஞனின் கவிதைகளைப் படிக்க நேரமில்லாது அல்லது விருப்பமில்லாத போதும்,அவன் வாழ்ந்த

வாழ்க்கையைப் பற்றிய செய்தியைக் கூடவா நம் இலக்கிய கர்த்தாக்கள் அறிந்து கொள்ள மாட்டார்கள்? இக்கவிஞனின் வாழ்க்கை பற்றி அறிந்திருந்தால் மனம் இளகி, 'நம் காலத்திலும் இப்படி ஒரு கவிஞனா?' என நினைத்து நெகிழ்ந்து இரண்டு வரி இரங்கல் செய்தியையாவது அவர்களால் அனுப்பியிருக்க முடியும் ஆனால்...?

இன்றும் இப்படி எத்தனையோ ஆனால்கள் விடை காணாத - முடியாத கேள்விக் குறியாகிவிட்ட முடிவற்ற துக்கம்தான், தமிழகத்தின் - தமிழர்களின் சாபக்கேடு போலும். பாரதியைப் போல - புதுமைப்பித்தனைப் போல - இன்னும் முகமறியாத எத்தனையோ கவிஞர்களும் இலக்கியவாதிகளும், சமுதாயத்தாலும் இலக்கிய வாதிகளாலும் கண்டு கொள்ளப்படாமல், கொல்லப்பட்டு விட்ட பின், அவர்களைக் கொண்டாடப் போகிறார்களோ? அன்று பசியிலும் வறுமையிலும் வாடிய வயிற்றுக்கு இன்று 'புகழ்' என்னும் வாய்க்கரிசியை போட்டு, கடன் கழிக்கப்பார்க்கிறார்களோ. இந்த தமிழகத்தின் இப்படிபட்ட தலைவிதியை மாற்றியமைக்க எவர் வந்து பிறக்கப் போகிறார்களோ. அந்தக் கடவுளுக்கே வெளிச்சம்.

இன்று வரை அறியப்படாமல் மறக்க - மறைக்கப்பட்ட இலக்கிய கர்த்தாக்களுக்கு என் மனமுருகிய இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வெ.இரா. நளினி



"என் செல்வமே!

அரசனின் வயிற்றில் பிறக்க வேண்டியவளான நீ, ஒவ்வொருநாள் மாலையும், காலை உணவுக்கு என்ன செய்வது? எனும் கவலை மிக்க கவிஞனின் வயிற்றில் வந்து பிறந்துவிட்டாய். விதி, 'கவி' என்னும் கயிற்றை என் கழுத்திலிட்டு இறுக்கும் பேய்க்கூத்தில் உன்னை..."

"மகளே! செல்வந்தனாவது மிகவும் சுலபம். ஆனால், கவிஞனாவது மிக மிகக் கடினம். ஆயினும் நான் கவிஞனாக வாழ்வதையே விரும்புகிறேன். ஒரு கவிஞனாக வாழ்வதைக் காட்டிலும் உயர்ந்த வாழ்க்கை உண்மையாக வேறில்லை என நான் உண்மையாகவே நம்புகிறேன்" வாழ்க்கை என்பதுதான் என்ன? ஆம்! அது ஒரு இடையறாத முயற்சி. மனதில் அச்சமோ, கவலையோ இன்றிச் சதா இயங்கிக் கொண்டே இருப்பதே வாழ்க்கை. அச்சமும், கவலையும் வாழ்க்கையை கோணலாக்கிவிடும்.



(வாழ்க்கையைப் போர்க்களமாக மாற்றிக் கொண்ட கவிஞனின் இதயத்தின் வாயிலாக எழுதப்பட்ட கடிதங்களிலிருந்து)